12 வது தமிழ் புத்தகம் வினா - விடை அடிப்படையில் தயாரிக்கப்பட்டது :

1) 'ஒன்றே யென்னின் ஒன்றேயாம்' - என்ற வரியில் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை பாடிய புலவர் யார்? = கம்பர்

2) 'ஒன்றே யென்னின் ஒன்றேயாம்' - என்ற வரியில் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடல் அமைந்துள்ள நூல் எது? = கம்பராமாயணம் - யுத்த காண்டம்

3) கம்பராமாயணத்தை இயற்றியவர் யார்? = கம்பர்

4) கம்பர் தான் எழுதிய கம்பராமாயண நூலுக்கு சூட்டிய பெயர் யாது? = இராமவதாரம்

5) கம்பர் பிறந்த ஊர் எது? = சோழ நாடு - திருவழுந்தூர்

6) கம்பர் வாழ்ந்த காலம் எது? = கி.பி 12 ஆம் நூற்றாண்டு

7) கம்பரை ஆதரித்த வள்ளல் யார்? = திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல்

8) கவிச்சக்ரவர்த்தி எனப் போற்றப்படும் கவிஞர் யார்? = கம்பர்

9) கம்பரின் சிறப்பை கூறும் தொடர்கள் சிலவற்றைக் கூறுக? = கவிச்சக்ரவர்த்தி, கல்வியில் பெரியவன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்

10) கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாது? = சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழுக்கம், சரசுவதி அந்தாதி முதலியன

11) கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் யார்? = புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவையார்

12) 'நண்ணு மிளமைப் பருவத்தி லேமுதல்' - என்ற வரிப் பாடலைப் பாடியவர் யார்? = தாரமங்கலம் அ.வரதநஞ்சையப் பிள்ளை

13) 'நண்ணு மிளமைப் பருவத்தி லேமுதல்' - என்ற வரிகளை கொண்ட பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = தமிழரசி குறவஞ்சி

14) தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார்? = சுவாமி மலையில் உள்ள முருகப்பெருமான்

15) முருகப்பெருமான் மீது மையில் கொண்ட தலைவி யார்? = தமிழரசி

16) அ.வரதநஞ்சையப் பிள்ளை அவர்களில் பெற்றோர் யார்? = அப்பாசாமி பிள்ளை - வரதாயி

17) எந்த இரு மொழிகளை அ.வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள் நன்கு அறிந்து இருந்தார்? = தெலுங்கு, வடமொழி

18) கரந்தை தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியர் பட்டம் பெற்றவர் யார்? = அ.வரதநஞ்சையப் பிள்ளை

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 1 of 48.

19) கற்றோரால் 'புலவரேறு' என்று சிறப்பிக்கப் பெற்றவர் யார்? = அ.வரதநஞ்சையப் பிள்ளை

20) கரந்தை தமிழ்ச் சங்கத்தில் யார் தலைமையில் அ.வரதநஞ்சையப் பிள்ளைக்கு 'தங்கத்தோடா' பரிசு அளிக்கப்பட்டது? = நமச்சிவாய முதலியார்

21) யார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அ.வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள் தமிழரசி குறவஞ்சியை இயற்றினார்? = தமிழ்வேள் உமாமகேசுவரனார்

22) அ.வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள் எப்பொழுது தான் இயற்றிய தமிழரசி குறவஞ்சி என்ற நூலை அரங்கேற்றினார்? = கரந்தை தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவின் போது

23) கரந்தை தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவின் போது யார் தலைமையில் அ.வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள் தமிழரசி குறவஞ்சி என்ற நூலை அரங்கேற்றினார்? = ஞானியாரடிகள்

24) அ.வரதநஞ்சையப் பிள்ளை அவர்களின் பிறப்பு - இறப்பு ஆண்டு எது? = 1877 - 1956

25) 'இந்திய நாடிது என்னுடை நாடே' - என்ற பாடலை பாடியவர் யார்? = நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

26) 'இந்திய நாடிது என்னுடை நாடே' - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = நாமக்கல் கவிஞர் பாடல்கள்

27) நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்ற நூலில் எந்த தலைப்பின் கீழ் 'இந்திய நாடிது என்னுடை நாடே' என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ளது? = என்னுடைய நாடு என்னும் தலைப்பில் தேசிய மலரில் இடம்பெற்றுள்ளது

28) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் பிறந்த ஊர் எது? = மோகனூர்

29) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் பிறந்த ஆண்டு எது? = 1888

30) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் அவர்களின் பெற்றோர் யார்? = வெங்கட்ராமன் - அம்மணியம்மாள் - 8 வது மகனாக பிறந்தார்

31) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் அவர்கள் எந்தக் கலையில் சிறந்தவராக விளங்கினார்? = முத்தமிழிலும் மற்றும் ஓவியக்கலையிலும் சிறந்து விளங்கினார்

32) வெ.இராமலிங்கனார் அவர்கள் வரைந்த முதல் ஓவியம் எது? = இராமகிருஷ்ணர்

33) வெ.இராமலிங்கனார் எந்த ஆண்டு உப்புச் சத்தியாகிரகத்தில் பங்குபெற்றார்? = 1932

34) வெ.இராமலிங்கனார் அவர்கள் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கு பெற்றதால் எத்தனை ஆண்டுகள் சிறைதண்டனை பெற்றார்? = ஓராண்டு

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 2 of 48.

35) உப்புச் சத்தியாகிரகத் தொண்டர்கள் வழிநடைப் பாடல் பாடுவதற்கு வெ.இராமலிங்கனார் அவர்கள் இயற்றிய பாடல் எது? = 'கத்தி யின்றி ரத்த மின்றி யுத்த மொன்று வருகுது'

36) வெ.இராமலிங்கனார் அவர்களுக்கு மத்திய அரசு எந்த விருது அளித்து சிறப்பித்தது? = பத்மபூஷண்

37) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் அவர்கள் இறந்த ஆண்டு எது? = 1972

38) வெளிப்படையாகத் தெரியும் பொருளோடு பிறிதொரு பொருள் புலப்படுமாறு அமைப்பது____எனப்படும்? = உள்ளுறை உத்தி

39) பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பிய நூலுக்கு இலக்கியமாய் திகழும் நூல்கள் எது? = சங்க காலப் பாடல்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள்

40) புறத்திணைகளுக்குரிய துறைப்பொருள்கள் அமைந்த நூல் எது? = புறநானூறு

41) புறத்திணைகளுக்கு கூறப்படும் துறைப்பொருள்கள் மொத்தம் எத்தனை? = 12

42) 12 துறைப்பொருள்கள் எவை? = வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை

43) புறநானூற்று நூலில் கடவுள் வாழ்த்து பாடலை பாடியவர் யார்? = பாரதம் பாடிய பெருந்தேவனார்

44) முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச்சங்க புலவர்கள் என பலருடைய வரலாற்று குறிப்புகள் மற்றும் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகள் ஆகியவை எந்த நூலின் மூலம் நாம் அறியலாம்? = புறநானூறு

45) புறநானூற்று நூலில் இடம்பெற்றுள்ள திணை மற்றும் துறைகள் யாது? = 11 புறத்திணைகள் + 65 துறைகள்

46) புறநானூற்று பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்? = ஜி.யு.போப்

47) எந்த ஆண்டு ஜி.யு போப் அவர்கள் புறநானூற்று பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்? = 1900

48) தமிழரின் உயரிய வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாக கொண்டு விளங்கும் நூல் எது? = புறநானூறு

49) 'பல்சான் றீரே பல்சான் றீரே' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு

50) 'பல்சான் றீரே பல்சான் றீரே' - எனும் பாடலை இயற்றியவர் யார்? = நரிவெரூஉத் தலையார்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 3 of 48.

51) வெட்சி முதல் பாடாண் இறுதியாக தொல்காப்பியமார் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும், அத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறும் திணை எது? = பொதுவியல் திணை

52) துறவியராகிய மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் 'இதுவென அதன் இயல்பை உணர்த்தும் துறை எது? = பொருண்மொழிக் காஞ்சி

53) நரிவெரூஉத் தலையார் இயற்றிய பாடல்கள் காணப்படும் வேறு நூல்கள் சிலவற்றைக் கூறுக? = குறுந்தொகை மற்றும் திருவள்ளுவமாலை

54) புறநானூற்று பாடலின் அடிவரையறை எது? = 4 முதல் 40 அடிவரை

55) புறநானூற்று பாடல்களை பாடிய புலவர்கள் மொத்தம் எத்தனை பேர்? = 160 பேர்

56) புறநானூற்று பாடல்கள் அனைத்தும் எந்த வகைப் பாக்களால் ஆனது? = அகவற்பாக்களால் ஆனது

57) அகநானூற்று பாடலின் அடிவரையறை யாது? = 13 அடிச் சிறுமையும் முதல் 31 அடிப் பெருமையும் கொண்டது

58) அகநானூற்று பாடல்களை தொகுத்தவர் யார்? = மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மார்

59) அகநானூற்று பாடல்களை தொகுபித்தவர் யார்? = பாண்டியன் உக்கிரப் பெருவழுதியான்

60) அகநானூற்று பாடலின் வேறு பெயர் யாது? = நெடுந்தொகை

61) அகநானூற்று நூலின் சிறப்பு வைப்பு முறை பற்றிக் கூறுக :

| பாடல்கள் தொடங்கும் எண்கள் | திணை வகை | திணையில் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1, 3, 5 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | பாலைத்திணை | 200 பாடல்கள் |
| 2, 8 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | குறிஞ்சித்திணை | 80 பாடல்கள் |
| 4, 14 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | முல்லைத்திணை | 40 பாடல்கள் |
| 6, 16 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | மருதத்திணை | 40 பாடல்கள் |
| 10, 20 என்ற எண்ணில் உள்ள பாடல்கள் | நெய்தல்திணை | 40 பாடல்கள் |

62) 'பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = அகநானூறு


Download more study materials visit www.tnpsctamil.in 4 of 48.
திரு.பழனி முருகன் B.E

63) அகநானூறு நூல் எத்தனை பிரிவுகளைக் கொண்டது? = 3 பிரிவுகள் - அவை -

1) களிற்றியானை - 120 பாடல்கள்
2) மணிமிடைபவளம் - 180 பாடல்கள்
3) நித்திலக்கோவை - 100 பாடல்கள்

64) 'பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன' - எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலை இயற்றியவர் யார்? = மதுரை மள்ளனார்

65) 'பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன' - எனத் தொடங்கும் பாடல் அகநானூற்று நூலில் எந்த பகுதியில் அமைந்துள்ளது? = மணிமிடைபவளம் - முல்லை திணைப் பாடல்

66) நற்றிணை நூலின் அடிவரையறை யாது? = 9 அடிச் சிறுமையும் முதல் 12 அடிப் பெருமையும் கொண்டது

67) நற்றிணை நூலின் கடவுள் வாழ்த்து பாடலை பாடியவர் யார்? = பாரதம் பாடிய பெருந்தேவனார்

68) நற்றிணை நூலை தொகுப்பித்தவர் யார்? = பன்னாடு தந்த மாறன் வழுதி

69) 'இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்' - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = நற்றிணை

70) 'இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்' - என தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்? = நக்கண்ணையார்

71) உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்னும் சோழ மன்னன் அவர்களின் மகன் யார்? = போரவைக் கோப்பெருநற்கிள்ளி

72) போரவைக் கோப்பெருநற்கிள்ளி அவர்கள் தன் தந்தையுடன் பகைத்துக் கொண்டு நாடிழைந்து வறுமையில் இருந்த போதிலும் எந்த மன்னனை போரில் வெற்றிக் கொண்டார்? = ஆமூர் மல்லன்

73) நக்கண்ணையார் எனும் பெண்பாற்புலவர் எந்த மன்னரை மணந்து கொள்ள விரும்பியதாக பாடினார்? = போரவைக் கோப்பெருநற்கிள்ளி

74) நக்கண்ணையார் அவர்கள் போரவைக் கோப்பெருநற்கிள்ளி எனும் மன்னனை மணந்து கொள்ள விரும்பியதாகக் கூறப்படும் பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு (83, 84, 85 ஆம் பாடல்கள்)

75) குறுந்தொகை நூலின் அடிவரையறை யாது? = 4 அடிச் சிறுமையும் முதல் 8 அடிப் பெருமையும் கொண்டது

76) குறுந்தொகை நூலில் உள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை? = 402 பாடல்கள்

77) 'யாரு மில்லை தானே கள்வன்' - என்ற பாடலை இயற்றியவர் யார்? = கபிலர்

திருமுருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 5 of 48.

78) 'யாரு மில்லை தானே கள்வன்' - எனத் தொடங்கும் வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = குறுந்தொகை

79) கபிலர் பிறந்த ஊர் எது? = திருவாதவூர்

80) கபிலருடன் நட்பு பூண்ட புலவர்கள் யார்? = பரணர், இடைக்காடர், ஔவை

81) எந்த மன்னனின் அவைக்களப் புலவராக கபிலர் திகழ்ந்தார்? = பாரி மன்னன்

82) 'புலனழுக் கற்ற அந்தணாளன்' - என்று புகழப்பட்ட கவிஞர் யார்? = கபிலர்

83) கபிலரை 'வாய்மொழிக் கபிலன்' எனப் பாராட்டியவர் யார்? = நக்கீரர்

84) 'நல்லிசைக் கபிலன்' என்று கபிலரை பாராட்டியவர் யார்? = பெருங்குன்றூர்கிழார்

85) கபிலரை 'வெறுத்த வேள்வி விளங்கு புகழ்க் கபிலன் - என்று பாராட்டியவர் யார்? = இளங்கீரனார்

86) கபிலரை 'புலனழுக்கற்ற அந்தணாளன் பொய்யா நாவிற் கபிலன்' என்று பாராட்டியவர் யார்? = மறோக்கத்து நப்பசலையார்

87) கபிலர் பாட்டுத் திறனுக்கு சான்றாக கூறப்படும் தொடர் எது? = கபிலரது பாட்டு

88) ஐங்குறு நூறு நூலின் அடிவரையறை யாது? = 3 அடிச் சிறுமையும் முதல் 6 அடிப் பெருமையும் கொண்டது

89) ஐங்குறுநூறு நூலின் திணை வைப்பு முறை யாது :

| திணை வகை | பாடிய புலவர்கள் |
|---|---|
| மருதம் | ஓரம்போகியார் |
| நெய்தல் | அம்மூவனார் |
| குறிஞ்சி | கபிலர் |
| பாலை | ஓதலாந்தையார் |
| முல்லை | பேயனார் |

90) ஐங்குறுநூறு நூலினை தொகுத்தவர் யார்? = புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

91) ஐங்குறுநூறு நூலினை தொகுப்பித்தவர் யார்? = கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமான்

92) ஐங்குறுநூறு நூலின் கடவுள் வாழ்த்து பாடலை பாடியவர் யார்? = பாரதம் பாடிய பெருந்தேவனார்

93) 'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = ஐங்குறுநூறு

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 6 of 48.

94) 'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை' - என்ற வரிப்பாடல் ஐங்குறுநூறு நூலில் எந்த தலைப்பின் கீழ் அமைந்துள்ளது? = மறுதரவுப் பத்து

95) 'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை' - என தொடங்கும் பாடலை இயற்றிய புலவர் யார்? = ஓதலாந்தையார்

96) மறுதரவுப் பத்து என்பதன் பொருள் யாது? = உடன் போக்கு நிகழ்த்திய தலைவனும் தலைவியும் மீண்டு வருதற்கண் நிகழும் கூற்றைப் பாடு பொருளாக்க் கொண்ட பத்துப்பாடல்களின் தொகுதி ஆகும்

97) பராய்க்கடன் உரைத்தல் என்பதன் பொருள் யாது? = தான் வேண்டியவை நிறைவேறுமானால் இன்னது படைப்பேன் என்று கடவுளரையோ, பிறவற்றையோ வேண்டிக்கொள்வது ஆகும்

98) 'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை' - என தொடங்கும் பாடல் ஐங்குறுநூறு நூலில் இடம்பெற்றுள்ள எந்த திணைப்பாடல் ஆகும்? = பாலைத் திணை

99) 'தமிழ்மாதின் இனிய உயிர்நிலை' - என்று உலகோரால் பாராட்டப்பட்ட நூல் எது? = திருக்குறள்

100) திருக்குறள் என்னும் நூலின் சிறப்பு யாது? = அடையடுத்த கருவியாகு பெயர்

101) திருக்குறளை போற்றி ஔவையார் பாராட்டிய வரி எது? = அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டில் குறுகத் தறித்த குறள்'

102) திருக்குறள் நூலின் நூல் அமைப்பு :

| பால் வகை | இயல்கள் | அதிகாரம் | இடம்பெற்ற இயல்கள் | மொத்த அதிகாரங்கள் | மொத்த குறள்கள் |
|---|---|---|---|---|---|
| அறத்துப்பால் | 4 | 38 | பாயிரவியல் இல்லறவியல், துறவியல், ஊழியல் | 133 அதிகாரங்கள் | 1330 குறள்கள் |
| பொருட்பால் | 3 | 70 | அரசியல், அங்கவியல் | | |
| காமத்துப்பால் | 2 | 25 | களவியல், கற்பியல் | | |

103) திருக்குறளின் அழியாத் தன்மையைப் பறைசாற்றும் நூல் எது? = திருவள்ளுவ மாலை

104) திருக்குறளின் வேறு பெயர் யாது? = முப்பால், வாயுறை வாழ்த்து, உத்தரவேதம், பொய்யாமொழி

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 7 of 48.

105) வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று கூறியவர் யார்? = பாரதியார்

106) ‘வள்ளுவனை பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே’ - என்று புகழ்ந்து பாடிய புலவர் யார்? = பாரதிதாசன்

107) திருக்குறளின் வேறு பெயர்கள் யாது? = முப்பால், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், திருவள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுப்பயன், பொருளுரை, முதுமொழி

108) திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் யார்? = தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையன், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர்

109) திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதியவர் என்று கற்றோர்களால் புகழப்பட்ட புலவர் யார்? = பரிமேலழகர்

110) திருவள்ளுவரை பாராட்டும் வேறு பெயர்கள் யாது? = நாயனார், தேவர், முதற்பாவலர், பொய்யில் புலவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபாங்கி, செந்நாப்போதார் ஆகியவை

111) திருக்குறளில் இடம்பெற்றுள்ள அணிவகைகளைக் பற்றிக் கூறுக :

| குறள் | அணி வகை |
|---|---|
| உதவி வரைத்தன் றுதவி உதவி | சொற்பொருட் பின்வருநிலை அணி |
| அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் | உவமை அணி |
| இன்மையு ளின்மை விருந்தொரால் | எடுத்துக்காட்டு உவமையணி |

112) ‘தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட’ - என்று திருக்குறளின் பெருமையை கூறிய புலவர் யார்? = கபிலர்

113) ‘வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார் உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து’ என்று திருக்குறளின் பெருமையை கூறிய புலவர் யார்? = பரணர்

114) ‘உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய் மொழி மாண்பு’ - என்று திருக்குறளின் பெருமையை கூறிய புலவர் யார்? = மாங்குடி மருதனார்

115) செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே சிந்தனை செய்வாய் தினம் - என்று திருக்குறளின் பெருமையை கூறிய புலவர் யார்? = கவிமணி

116) நீதித்திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில் ஓதித்தொழுது எழுக ஓர்ந்து - என்று திருக்குறளின் பெருமையை கூறிய புலவர் யார்? = கவிமணி

117) சிலப்பதிகார நூலை பாராட்டும் சிறப்பு பெயர்களைக் கூறுக? = முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், நாடகக் காப்பியம் ஆகியவை

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 8 of 48.

118) தமிழின் முதல் காப்பியம் எது? = சிலப்பதிகாரம்

119) சிலப்பதிகாரத்தின் நூல் அமைப்பு யாது? = 3 காண்டம் + 30 காதைகள் + 5001 பாடல்கள் கொண்டது

120) சிலப்பதிகார நூலை இயற்றியவர் யார்? = இளங்கோவடிகள்

121) இளங்கோவடிகளின் பெற்றோர் யார்? = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் மகள் நற்சோணைக்கும் மகனாக தோன்றினார்

122) இளங்கோவடிகளின் தமையன் பெயர் என்ன? = சேரன் செங்குட்டுவன்

123) இளங்கோவடிகள் வாழ்ந்த காலம் எது? = கி.பி இரண்டாம் நூற்றாண்டு

124) சிலப்பதிகார நூலில் கூறப்படும் மூன்று காண்டங்கள் எவை?

1) புகார்க் காண்டம் - 10 காதைகள் - (மங்கல வாழ்த்து பாடல் முதல் நாடு காண் காதை வரை)

2) மதுரைக் காண்டம் - 13 காதைகள்- (காடு காண் காதை முதல் கட்டுரை காதை வரை)

3) புகார் காண்டம் - 7 காதைகள் - (குன்றக் குரவை முதல் வரம் தரும் காதை வரை)

125) சிலப்பதிகார நூலில் உள்ளுறையாக கூறப்படும் மூன்று உண்மைகள் எவை?

1) அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்

2) உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் எத்தலும்

3) ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்

126) சிலப்பதிகார நூலுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் யார்? = அரும்பத உரைகாரர் மற்றும் அடியார்க்கு நல்லார்

127) சிலப்பதிகார நூல் முழுமைக்கும் உரையெழுதிய இக்கால உரையாசிரியர் யார்? = ந.மு.வேங்கடசாமி நாட்டார்

128) இரட்டைக் காப்பியங்கள் என்று கூறப்படும் நூல்கள் எது? = மணிமேகலை, சிலப்பதிகாரம்

129) ‘முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக’ - என்று இளங்கோவடிகளிடம் கூறியவர் யார்? = மணிமேகலையை இயற்றிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

130) ‘நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்’ - என்று கூறியவர் யார்? = இளங்கோவடிகள்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 9 of 48.

131) சிலப்பதிகார நூலை 'நெஞ்சையள்ளும் சிலம்பு' - எனப் பாராட்டிய புலவர் யார்? = பாரதியார்

132) சிலப்பதிகார நூலை 'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தோறும் சிலப்பதிகாரம்' எனப் பாராட்டிய புலவர் யார்? = கவிமணி

133) கோவலனின் தந்தை பெயர் யாது? = புகார் நகரத்து பெருங்குடி வாணிகர் மாசாத்துவான் மகன்

134) கண்ணகியில் தந்தை பெயர் யாது? = மாநாய்கன்

135) புகார் நகரத்தில் தலைக்கோலரிவை என்ற பட்டத்தை பெற்றவள் யார்? = மாதவி

136) இந்திர விழாவில் மாதவி பாடிய எந்த வரிப்பாடல்களால் பிணுக்குற்று கோவலன் மாதவியை விட்டு பிரிந்தான்? = கானல் வரிப்பாடல்களால்

137) யார் துணையோடு கோவலன் மற்றும் கண்ணகி இருவரும் புகார் நகரை விட்டு மதுரையை நோக்கி சென்றனர்? = கவுந்தியடிகள் என்னும் சமணத் துறவியின் துணையோடு

138) கவுந்தியடிகள் துணையோடு கோவலன் மற்றும் கண்ணகி இருவரும் மதுரையடுத்த எங்கு தங்கினர்? = புறஞ்சேரி

139) கவுந்தியடிகள் தன் கூட வந்த இருவரையும் மதுரையில் யாரிடம் அடைக்கலம் செய்து விட்டு சென்றார்? = ஆயர்குலப் பெண்ணாகிய மாதிரி

140) கண்ணகி தன் கணவனோடு மதுரைக்கு செல்லும் நிகழ்வு சிலப்பதிகார நூலில் எந்த பகுதியில் கூறப்படுகிறது? = ஊர்சூழ்வரி பகுதி

141) சிலப்பதிகார நூலில் எந்த காண்டத்தில் ஊர்சூழ்வரி பகுதி காணப்படுகிறது? = 19 வது காதை - மதுரைக்காண்டம்

142) 'கழுத்தில் விழுந்த மாலை கழட்ட முடியவில்லை காரிகையே இதுயார் செய்த சூதோ' என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = கர்ணகை நாடகம்

143) ஆதிகவி என்று அழைக்கப்பட்டவர் யார்? = வால்மீகி

144) வால்மீகி இயற்றிய நூல் எது? = இராம காதை

145) இராம காதையின் வேறு பெயர் யாது? = ஆதிகாவியம்

146) கம்பரின் இராமாயணத்தை கற்றறிந்த அறிஞர்கள் எவ்வாறு கூறுகின்றனர்? = கம்ப நாடகம், கம்பசித்திரம்

147) கம்பர் கூறும் யாப்பு வண்ணங்கள் எத்தனை? = 96

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 10 of 48.

148) கம்பராமாயண நூலின் நூல் அமைப்பு யாது? = 6 காண்டம் + 118 படலங்கள் + 10589 பாடல்கள்

149) கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள 6 காண்டங்கள் பற்றிக் கூறுக?

1) பால காண்டம்
2) அயோத்தியா காண்டம்
3) ஆரணிய காண்டம்
4) கிட்கிந்தா காண்டம்
5) சுந்தர காண்டம்
6) யுத்த காண்டம்

150) உத்தர காண்டத்தை இயற்றிய புலவர் யார்? = ஒட்டக்கூத்தர்

151) உத்தர காண்டம் யாருடைய வரலாற்றை கூறுகிறது? = இராமனின் மகன்களான இலவ-குசவர்களை பற்றி கூறுகிறது

152) கம்பராமாயணத்தில் திருவடி தொழுத படலம் அமைந்துள்ள காண்டம் எது? = சுந்தர காண்டம்

153) காண்டம் என்பது பெரும்பிரிவு; படலம் என்பது - உட்பிரிவு

154) இராமாயணத்தில் ஐந்தாம் காண்டமாக இடம்பெற்றுள்ள காண்டம் எது? =சுந்தர காண்டம்

155) இராமாயண காப்பியத்தின் முடிமணியாக திகழும் காண்டம் எது? = சுந்தர காண்டம்

156) சுந்தர காண்டத்தில் யாருடைய செயல்கள் அதிகமாக கூறப்பட்டுள்ளன? = அனுமன்

157) அனுமனின் வேறு பெயர் யாது? = சுந்தரன்

158) இராமன் அனுமனிடம் கொடுத்தனுப்பிய பொருள் எது? = கணையாழி

159) சீதை அனுமனிடம் கொடுத்தனுப்பிய பொருள் எது? = சூடாமணி

160) சீதா பிராட்டி தன்னை மீட்டுச்செல்ல வேண்டி விதித்த காலம் எது? = ஒரு திங்கள்

161) ‘கண்டேன் கண்டேன் கண்டேன் சீதையைக் கண்டேன் இராகவா’ - என்று வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = இராமநாடகக் கீர்த்தனை

162) வீரமாமுனிவர் பிறந்த ஊர் எது? = இத்தாலி

163) தேம்பாவணி நூலை இயற்றிய ஆசிரியர் யார்? = வீரமாமுனிவர்

164) தேம்பாவணி நூலின் நூல் அமைப்பு யாது? = 3 காண்டங்கள் + 36 படலங்கள் + 3615 பாடல்கள்

165) தேம்பா + அணி என்பதன் பொருள் யாது? = என்றும் வாடாத மாலை

திரு முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

166) தேன் + பா + அணி என்பதன் பொருள் யாது? = தேன் போன்ற பாக்களை அணியாக உடைய நூல்

167) தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர் யார்? = இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாரகிய சூசை மாமுனிவர்

168) கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படும் நூல் எது? = தேம்பாவணி

169) வீரமாமுனிவரின் இயற்பெயர் யாது? = கொன்ஸ்டான் ஜோசப்பெஸ்கி

170) கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழிச் சொல்லின் பொருள் யாது? = அஞ்சாமை

171) வீரமாமுனிவர் கொன்ஸ்டான் என்னும் தன் இயற்பெயரை தமிழில் எந்த பெயராக மாற்றிக் கொண்டார்? = தைரியநாதசாமி

172) வீரமாமுனிவர் அவர்கள் தமிழகம் வந்த ஆண்டு எது? = கி.பி 1710

173) வீரமாமுனிவர் இறந்த ஆண்டு எது? = 1747

174) வீரமாமுனிவர் எத்தனை ஆண்டுகள் தமிழகத்தில் சமய பணியும் மற்றும் தமிழ்ப் பணியும் புரிந்தார்? = 37 ஆண்டுகள்

175) வீரமாமுனிவர் இறந்த இடம் எது? = அம்பலக்காடு

176) வீரமாமுனிவர் இயற்றிய வேறு நூல்கள் எவை? = திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருகதை, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், சதுரகாதி

177) வீரமாமுனிவர் அவர்கள் திருக்குறளின் உள்ள எந்த இரு அதிகாரங்களை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார்? = அறத்துப்பால் மற்றும் பொருட்பால்

178) யூதேயா நாட்டில் எந்த மன்னன் ஆட்சியில் மலைநாடுகளில் வாழ்ந்தவர்கள் திருமறையை பழித்தும் கடவுளை இகழ்ந்தும் வந்தனர்? = சவுல் என்ற மன்னன் ஆட்சியில்

179) சவுல் என்ற மன்னனை எதிர்த்து மலைநாட்டவர்கள் யார்? = பிலித்தையர்

180) பிலித்தையரின் தலைவன் யார்? = கோலியாத்து என்னும் அரக்கன்

181) கோலியாத்து அவர்கள் அறைகூவல் விடுத்து எத்தனை நாள்கள் வரை யாரும் போரிட வரவில்லை? = 40 நாள்கள்

182) அகல் முகில் உருக்கொண்டு வந்தவன் யார் என்று ஆசிரியர் கூறுகிறார்? = கோலியாத்து

183) கோலியாத்தை எதிர்த்து போரிட்ட சிறுவன் யார்? = தாவீதன்



Download more study materials visit www.tnpsctamil.in 12 of 48.

184) தாவீதன் என்ற இளைஞன் எந்த கருவிகளை எடுத்துக்கொண்டு போருக்கு சென்றான்? = ஒரு கவன் மற்றும் ஐந்து கற்கள்

185) பாண்டியன் பரிசு என்ற நூலை இயற்றியவர் யார்? = பாவேந்தர் பாரதிதாசன்

186) பாரதிதாசனுக்கு பாவேந்தர் என்ற பட்டத்தை அருளியவர் யார்? = அண்ணா

187) பாரதிதாசன் பிறந்த ஊர் எது? = புதுச்சேரி - 1891 ஆம் ஆண்டு

188) பாரதிதாசனின் பெற்றோர் யார்? = கனகசபை - இலக்குமி அம்மாள்

189) பாரதிதாசனின் இயற்பெயர் யாது? = சுப்புரத்தினம்

190) பாரதிதாசன் எந்த இரு மொழிகளில் புலமை பெற்றவராக விளங்கினார்? = தமிழ் மற்றும் பிரெஞ்சு

191) 'தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாதமரம்' - என்று பாடியவர் யார்? = உருசியக் கவிஞர் இரசூல் கம்சதேவ்

192) பாரதிதாசன் இயற்றிய வேறு நூல்கள் யாது? = குடும்பவிளக்கு, சேரதாண்டவம், இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குறிஞ்சித்திட்டு, அழகின் சிரிப்பு, இளைஞர் இலக்கியம், தமிழக்கியம், திருக்குறள் உரை ஆகியவை

193) பாரதிதாசன் அவர்கள் எழுதிய எந்த நாடக நூலுக்குச் சாகித்திய அகாடமி பரிசு பெற்றது? = பிசிராந்தையார்

194) பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கு எந்த ஆண்டு சாகித்திய அகாடமி பரிசுப் பெற்றது? = 1969

195) பாரதிதாசனின் எந்த வரிப்பாடல் புதுவை அரசின் தமிழ் வாழ்த்துப்பாடலாக ஏற்றுக் கொண்டுள்ளது? = 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே'

196) பல்வேறு கவிஞர்கள் தோன்றி வளரக் காரணமாயிருந்த பாரதிதாசன் தொடங்கிய இதழ் எது? = குயில்

197) 'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள் இனமீன்ற தமிழ்நாடு தனக்கும்' - என்ற வரிப்பாடலை பாடியவர் யார்? = பாரதிதாசன்

198) 'தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துறைதோறுந் துடித்தெழுந்தே' - என்ற பாடலை பாடியவர் யார்? = பாரதிதாசன்

199) கதிர் நாட்டை ஆண்ட மன்னன் யார்? = கதிரை வேலன்

200) கதிரைவேலனின் மனைவி பெயர் யாது? = கண்ணுக்கினியாள்

201) கதிரைவேலனின் ஒரே மகள் பெயர் யாது? = அன்னம்

202) கதிரைவேலனின் படைத்தலைவன் பெயர் யாது? = நரிக்கண்ணன்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 13 of 48.

203) அரசியின் தோழி மற்றும் அன்னத்தின் செவிலித்தாய் யார்? = ஆத்தாக்கிழவி

204) ஆத்தாக்கிழவின் மகன் பெயர் யாது? = வேலன்

205) அன்னத்தின் தோழி பெயர் யாது? = நீலி

206) பிரபந்தம் என்ற வடசொல்லின் பொருள் யாது? = நன்கு கட்டப்பட்டது

207) சிற்றிலக்கியத்தின் இலக்கணத்தை விளக்கி கூறும் நூல் எது? = பாட்டியல் நூல்கள்

208) பாட்டிய நூல்களுள் குறிப்பிட்டுக் சொல்லக் கூடிய நூல் எது? = வச்சணந்திமாலை

209) வீரமாமுனிவர் இயற்றிய எந்த நூலில் பிரபந்தம் 96 எனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்? = சதுரகாதி

210) சிற்றிலக்கியங்களுள் சிறப்பானவையாக கருதப்படும் இலக்கியங்கள் எது? = உலா, தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி ஆகியவை

211) சிற்றிலக்கியங்கள் யாருடைய சிறப்புகளை எடுத்துக் கூறும் நோக்கிலேயே எழுதப்பெற்றுள்ளன? = இறைவன், மன்னன், மக்களுள் சிறந்தோர்

212) உலா என்பதன் பொருள் யாது? = பவனிவரல்

213) ஏழுவகைப் பருவ மகளிர் யார்? = பேதை (5 - 7), பெதும்பை (8 - 11), மங்கை (12 - 13), மடந்தை (14 - 19), அரிவை (20 - 25), தெரிவை (26 - 32), பேரிளம்பெண் (33 - 40)

214) உலா என்னும் சிற்றிலக்கிய பாடல்கள் அனைத்தும் எந்த வகை பாக்களால் இயற்றப்பட்டுள்ளது? = கலிவெண்பாவால்

215) உலா இலக்கியத்தின் வேறு பெயர் யாது? = உலாப்புறம்

216) முன்னிலை - பின்னிலை என்று பாடப்படும் சிற்றிலக்கிய நூல் எது? = உலா

217) உலாவின் முன்னிலையில் கூறப்படும் சிறப்புகள் யாது? = ஒப்பனை செய்தல், பாட்டுடைத்தலைவனின் சிறப்பு, நீராடல், பரிவாரங்கள் புடை சூழ தன் ஊர்தியில் ஏறி உலா வரல்

218) உலாவின் பின்னிலையில் கூறப்படும் சிறப்புகள் யாது? = உலா வரும் தலைவனைக் கண்டு காதல் கொண்ட ஏழு பருவ மகளிர் தனித்தனியாக கூறுவது

219) இராசராச சோழனுலாவை பாடியவர் யார்? = ஒட்டக்கூத்தர்

220) ஒட்டம் என்பதன் பொருள் யாது? = பந்தயம்

221) ஒட்டக்கூத்தரின் சிறப்பு பெயர் யாது? = கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சன்

222) ஒட்டக்கூத்தர் எந்த மன்னர்களின் அவையில் மிகவும் செல்வாக்கோடு விளங்கினார்? = விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 14 of 48.

223) ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலா எது? = விக்கிரமசோழன் உலா, இராசராச சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா

224) ஒட்டக்கூத்தர் இயற்றிய வேறு நூல்கள் யாது? = தக்கயாகப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், ஈட்டி எழுபது, அரும்பைத்தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக்கோவை

225) ஒட்டக்கூத்தர் வாழ்ந்த காலம் எது? = 12 ஆம் நூற்றாண்டு

226) இலங்கைக்கு சேது அணை கட்ட வருணன் வழிவிடாதபோது சினந்து அம்பு எய்தியவர் யார்? = இராமன்

227) வானத்தில் நிலைகொண்டலைந்த ஊர்களை வென்றவர் யார்? = தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்

228) கடற்கொள்ளையர்களை வென்று, அவர்களின் காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டி முரசு செய்தவன் யார்? = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

229) இருபத்தொரு தலைமுறை அரசர்களை வென்றவர் யார்? = பரசுராமர்

230) தாம் வென்ற நாடுகளையும் அரசர்களின் முடிகளையும் பரசுராமர் யாருக்கு கொடுத்தார்? = காசிபர்

231) அந்தம் என்ற சொல்லின் பொருள் யாது? = இறுதி

232) ஆதி என்ற சொல்லின் பொருள் யாது? = முதல்

233) அந்தாதி - வரையறை யாது? = ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்து பாடுவது அந்தாதி எனப்படும்

234) திருவேங்கடத்து அந்தாதி என்னும் நூலின் ஆசிரியர் யார்? = பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

235) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அவர்கள் வாழ்ந்த காலம் எது? = 17 ஆம் நூற்றாண்டு

236) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அவர்களின் வேறு பெயர்கள் யாது? = அழகிய மணவாளதாசர், திவ்வியக்கவி

237) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் எழுதிய எட்டு நூல்களின் தொகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது? = அஷ்டபிரபந்தம்

238) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அவர்கள் எந்த மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்தார்? = திருமலை நாயக்க மன்னரின் அவையில் (1623 முதல் 1659 வரை)



Download more study materials visit www.tnpsctamil.in 15 of 48.

திரு.பழனி முருகன் B.E

239) சொற்றொடர்நிலை என அழைக்கப்படுவது? = அந்தாதி

240) முதல் அந்தாதி நூல் எது? = அற்புதத்திருவந்தாதி

241) அற்புதத்திருவந்தாதி என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்? = காரைக்கால் அம்மையார்

242) பொன்வண்ணந்தந்தாதி என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்? = சேரமான் பெருமாள் நாயனார்

243) திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்? = நம்பியாண்டார் நம்பி

244) திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால் - எனத் தொடங்கும் பாடலில் இடம்பெற்றுள்ள அணி எது? = திரிபு அணி

245) செய்யுளின் அடிதோறும் முதற்சீர் முதலெழுத்து தவிர ஏனைய எழுத்துகள் ஒன்றி வந்து வெவ்வேறு பொருள் தருவது எது? = திரிபு அணி ஆகும்

246) கதம்பம் என்பது கலம்பகம் என்று திரிந்ததாக கூறியவர் யார்? = டாக்டர் உ.வே.சா

247) கலம் - பன்னிரண்டு; பகம் - ஆறு; (12 + 6 = 18 உறுப்புகள்)

248) தமிழில் தோன்றிய முதல் கலம்பக நூல் எது? = நந்திக் கலம்பகம்

249) அந்தாதி தொடையில் 100 பாடல்கள் வரை பாடுவது___எனப்படும்? = கலம்பகம்

250) மதுரைக் கலம்பக நூலின் பாட்டுடைத் தலைவன் யார்? = மதுரை மாநகரில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு அங்கயற்கண்ணி உடனாய சொக்கநாதப் பெருமான்

251) மதுரைக் கலம்பக நூலை இயற்றியவர் யார்? = குமரகுருபரர்

252) குமரகுருபரர் வாழ்ந்த காலம் எது? = 17 ஆம் நூற்றாண்டு

253) குமரகுருபரர் பிறந்தது முதல் எத்தனை ஆண்டுகள் வரை பேசாத குழந்தையாய் இருந்தார்? = 5 வயது வரை

254) குமரகுருபரர் யாரின் திருவருளால் பேசும்திறனை பெற்றார்? = திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால்

255) குமரகுருபரர் இயற்றிய வேறு நூல்கள் எது? = மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண்பா, காசிக்கலம்பகம், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம் ஆகியவை

256) குமரகுருபரரின் செய்யுட்களின் தனிச்சிறப்பு யாது? = இன்னோசை

257) தமிழ் மற்றும் தெய்வத்தையும் இருகண்களாக கொண்டு வாழ்ந்த துறவி யார்? = குமரகுருபரர்

திரு.பழனி முருகன் B.E.



Download more study materials visit www.tnpsctamil.in 16 of 48.

258) வடமொழிக்கவிஞர் காளிதாசன் எழுதிய எந்த தூது நூல் உலகப்புகழ் பெற்றதாக விளங்குகிறது? = மேகசந்தேசம்

259) தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகைப்பிரிவில் எந்த இலக்கியவகை பள்ளு வகை இலக்கியத்திற்கு பொருந்துகிறது? = புலன் என்னும் இலக்கிய வகை

260) முக்கூடலில் கலக்கும் ஆறுகள் எது? = தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு

261) முக்கூடற்பள்ளு நூலின் பாட்டுடைத்தலைவன் யார்? = அழகர்

262) சைவ வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியம் கொண்ட நூல் எது? = முக்கூடற்பள்ளு

263) உழவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை சுவை பெறச் சொல்லும் சிற்றிலக்கியம் எது? = பள்ளு

264) சிந்தும் விருத்தமும் பரவிவர பாடப்படும் நூல் எது? = முக்கூடற்பள்ளு

265) மறுமலர்ச்சி பாடல்களின் உயிர் நாடி எது? = மானுடம்பாடும் நெறி

266) மாலைக்கால வருணை என்ற பகுதி அமைந்துள்ள நூல் எது? = பாஞ்சாலி சபதம்

267) பாஞ்சாலி சபதம் நூலில் உள்ள சருக்கங்கள் எத்தனை? = 5 சருக்கங்கள் - அவை

1) அழைப்புச் சருக்கம்; 2) சூதாட்டச் சருக்கம்; 3) அடிமைச் சருக்கம்;

4) துகிலுரிதற் சருக்கம்; 5) சபதச் சருக்கம்;

268) மாலைக்கால வருணை என்ற பகுதி பாஞ்சாலி சபதம் நூலில் எந்த சருக்கத்தில் அமைந்துள்ளது? = அழைப்புச் சருக்கம்

269) 'நமக்கு தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்' - என்னும் கொள்கை முழுக்கமிட்ட கவிஞர் யார்? = பாரதியார்

270) பாரதியார் பிறந்த ஆண்டு எது? = 1882 - எட்டயபுரம் - தூத்துக்குடி மாவட்டம்

271) பாரதியாரின் பெற்றோர் யார்? = சின்னச்சாமி ஐயர் - இலக்குமி அம்மாள்

272) பாரதியாரின் இளமைப் பெயர் யாது? = சுப்ரமணியன்

273) 'பாரதி' - என்ற சொல்லின் பொருள் யாது? = கலைமகள்

274) 'தமிழ் நாட்டில் தமிழ்ப்புலவன் ஒருவன் இல்லையனும் வசை நீங்க' வந்த புலவர் யார்? = பாரதியார்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 17 of 48.

275) பண்டிதர்களின் கரடுமுரடான நடையில் தேங்கி கிடந்த தமிழைப் பலரும் படித்தறியும் வகையில், எளிய, இனிய பாக்களாக வடித்து உலவவிட்ட புலவர் யார்? = பாரதியார்

276) 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' எனவும் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனவும் தமிழ்மொழி பரவிட விழைந்த தமிழ்ப் பாவலர் யார்? = பாரதியார்

277) ஆன்மீக விடுதலை, பெண்விடுதலை, சமுதாய விடுதலை, முதலான விடுதலைகளை உள்ளடக்கிய நாட்டு விடுதலையை விழைந்த விடுதலைக் கவிஞர் யார்? = பாரதியார்

278) இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கவிஞர் யார்? = பாரதியார்

279) பாரதியார் புலமை பெற்றிருந்த மொழிகள் யாது? = தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி, வங்காளம், பிரெஞ்சு, அரபு முதலான மொழிகள்

280) 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்' எனப் பாடி தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்தவர் யார்? = பாரதியார்

281) 'தேனொக்கும் செந்தமிழே! நீ கனி! நான் கிளி! வேறென்ன வேண்டும் இனி?' - என்ற தமிழ் உணர்வு பாடலை பாடியவர் யார்? = பாரதிதாசன்

282) 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே' - என இனவுணர்வு தூண்டும் பாடலை பாடியவர் யார்? = பாரதிதாசன்

283) 'உறுதி! உறுதி! ஒன்றே சமூகம் என்று எண்ணார்க்கு இறுதி! இறுதி!' - என்ற சமுதாய உணர்வு பாடலை பாடியவர் யார்? = பாரதிதாசன்

284) நாடு, மொழி, இனம், சமுதாயச் சீர்திருத்தம், இயற்கை முதலானவற்றைப் பாடு பொருளாகக் கொண்டு பாரதிதாசன் இயற்றிய நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = இறைவா இன்பக்களஞ்சியங்கள்

285) செந்தமிழை செழுந்தமிழாக காண விரும்பிய புலவர் யார்? = பாரதிதாசன்

286) என்னருந்தமிழ் நாட்டிங்கண் எல்லாருங் கல்வி கற்க வேண்டும் என விழைந்த புலவர் யார்? = பாரதிதாசன்

287) 'எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம் என்று பாடியவர் யார்? = பாரதிதாசன்

288) 'எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்' - என்று பாடியவர் யார்? = பாரதிதாசன்

திரு. பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 18 of 48.

289) ‘பாரதிதாசன் பரம்பரையில் என்றழைக்கப்படும் தலைமுறையில் வந்த கவிஞர் யார்? = வாணிதாசன்

290) வாணிதாசன் பிறந்த ஊர் எது? = புதுவை அடுத்த வில்லியனூர்

291) வாணிதாசனின் பெற்றோர் யார்? = திருக்காமு - துளசியம்மாள்

292) வாணிதாசனின் இயற்பெயர் யாது? = அரங்கசாமி என்கிற எத்திராசலு

293) பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்க கல்வி பயின்ற கவிஞர் யார்? = வாணிதாசன்

294) யாருடைய கவிதைகளை சாகித்திய அகாடமி ‘தமிழ் கவிதைக் களஞ்சியம்’ என்ற நூலாக வெளியிட்டுள்ளது? = வாணிதாசன்

295) தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட எந்த நூலில் வாணிதாசன் கவிதைகள் இடம்பெற்றுள்ளன? = புதுத்தமிழ்க் கவிமலர்கள்

296) வாணிதாசன் இயற்றிய கவிதைகள் எந்த இரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன? = உருசியம், ஆங்கிலம்

297) ‘தமிழ் - பிரெஞ்சு கையகர முதலி’ - என்ற நூலை வெளியிட்டவர் யார்? = வாணிதாசன்

298) பிரெஞ்சு குடியரசு தலைவரால் செவாலியர் விருது பெற்ற தமிழ்க் கவிஞர் யார்? = வாணிதாசன்

299) வாணிதாசனின் சிறப்பு பெயர்கள் யாது? = கவிஞரேறு, பாவலர் மணி

300) ‘தமிழகத்தின் வோர்ட்ஸ்வர்த்’ - என்று பாரட்டப்பட்ட கவிஞர் யார்? = வாணிதாசன்

301) வாணிதாசன் அவர்கள் காடு என்னும் தலைப்பில் எழுதிய கவிதைகள் இடம்பெற்றுள்ள நூல் எது? = எழிலோவியம்

302) வாணிதாசன் பிறப்பு - இறப்பு ஆண்டு எது? = 1915 - 1974

303) கவிஞர் சுரதா அவர்கள் சிக்கனம் என்னும் தலைப்பில் இயற்றிய கவிதைகள் எந்த மலரில் இடம்பெற்றிருந்தன? = எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டு மலரில்

304) ‘தித்திக்கும் தமிழிலே முத்து முத்தாய்ப் பாடல் செய்தவர் - திருவள்ளுவர் என தொடங்கும் இசைப்பாமாலையை திருவள்ளுவர்க்கு சூட்டிய கவிஞர் யார்? = சுரதா

305) ‘இரட்டைக் கிளவி போல் இணைந்தே இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை’ - என்று பாடியவர் யார்? = சுரதா

306) ‘பாதம்பூ என்பதையே நாமெல்லோரும் பாம்பென்று கூறுகின்றோம்’ - என்று கூறிய புலவர் யார்? = சுரதா

307) ‘சோகம் தராதவன் அசோகன்’ - என்று பாடியவர் யார்? = சுரதா

திருமுருகன் BE



Download more study materials visit www.tnpsctamil.in 19 of 48.

308) பாரதிதாசனின் தலைமாணாக்கர் என்று அழைக்கப்படுபவர் யார்? = சுரதா

309) சுரதா பிறந்த ஊர் எது? = திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி பக்கத்தில் உள்ள பழையனூர்

310) சுரதாவின் இயற்பெயர் யாது? = இராசகோபாலன்

311) சுரதா இயற்றிய வேறு நூல்கள் சிலவற்றைக் கூறுக? = தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்

312) சுரதாவின் எந்த நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறைப் பரிசைப் பெற்றுள்ளது? = தேன்மழை

313) தமிழக அரசு வழங்கும் பாவேந்தரின் நினைவுப் பரிசினை பெற்ற முதற்பாவலர் யார்? = சுரதா

314) ஆலந்தூர் கோ.மோகனரங்கனின் எந்த நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது? = இமயம் எங்கள் காலடியில்

315) ஆலந்தூர் கோ.மோகனரங்கன் அவர்கள் மனித நேயம் என்ற தலைப்பில் எழுதிய பாடல்கள் அனைத்தும் இடம்பெற்றுள்ள நூல் எது? = நல்ல உலகம் நாளை மலரும்

316) தாராபாரதி எழுதிய வேலைகளல்ல வேள்விகளே! என்ற பாடல்கள் இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு எது? = இது எங்கள் கிழக்கு

317) தாராபாரதி பிறந்த ஊர் எது? = திருவண்ணாமலை மாவட்டம் - குவளை என்னும் சிற்றூர்

318) தாராபாரதியின் பெற்றோர் பெயர் யாது? = துரைசாமி - புஷ்பம் அம்மாள்

319) தாரா பாரதி அவர்கள் எத்தனை ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார்? = 34

320) தாராபாரதி இயற்றிய வேறு நூல்கள் யாது? = புதிய விடியல்கள், விரல்நுனி வெளிச்சங்கள், பூமியை திறக்கும் பொன்சாவி, இன்னொரு சிகரம் ஆகியவை

321) தாராபாரதி பிறப்பு - இறப்பு ஆண்டுகள் எது? = 1947 - 2000

322) அப்துல் ரகுமான் அவர்கள் தீக்குச்சி எனும் தலைப்பில் எழுதிய பாடல்கள் இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு எது? = சுட்டுவிரல்

323) அப்துல் ரகுமான் பிறந்த ஊர் எது? = மதுரை

324) 'மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர் என்று பாராட்டப்பட்ட கவிஞர் யார்? = கவிக்கோ அப்துல் ரகுமான்

325) அப்துல் ரகுமான் இயற்றிய வேறு நூல்கள் எது? = பால்வீதி, நேயர் விருப்பம், சொந்தச்சிறைகள், கரைகளே நதியாவதில்லை, விலங்குகள் இல்லாத கவிதை


Download more study materials visit www.tnpsctamil.in 

326) இறைமைத் தத்துவம் என்பது யாது? = மாந்தர் தம் நெஞ்சம் எம்மதம் எவ்விறை என்று கருதுகின்றதோ அம்மதம் அவ்விறை என்று பொழிவது ஆகும்

327) சுந்தரரின் தேவாரம் பன்னிருதிருமுறைகளில் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது? = ஏழாவது திருமுறை

328) சுந்தரர் பிறந்த ஊர் எது? = திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூர்

329) சுந்தரரின் இயற்பெயர் யாது? = நம்பியாரூரர்

330) சுந்தரர் அவர்கள் எந்த அரசரால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டார்? = நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசரால் வளர்க்கப்பட்டார்

331) தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பட்டவர் யார்? = சுந்தரர்

332) சுந்தரர் எழுதிய எந்த நூலை முதனூலாகக் கொண்டு சேக்கிழார் அவர்கள் திருத்தொண்டர் புராணம் என்ற நூலை எழுதினார்? = திருத்தொண்டத் தொகை

333) ஆழ்வார்கள் பன்னிருவரால் அருளப்பட்ட நூல் எது? = நாலாயிரத்திவ்விய பிரபந்தம்

334) ஆழ்வார் என்னும் சொல்லின் பொருள் யாது? = ஆழ்ந்தறியும் அறிவைக் கருவியாக உடையவர் என்றும் எம்பெருமானுடைய மங்கலக் குணங்களில் ஆழங்காற்பட்டவர் என்றும் பொருள்

335) குலசேகர ஆழ்வார் பிறந்த ஊர் எது? = சேர நாடு - திருவஞ்சிக்களம்

336) குலசேகர ஆழ்வார் எழுதிய பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல் எது? = பெருமாள் திருமொழி

337) பெருமாள் திருமொழியில் இடம்பெற்றுள்ள மொத்த பாடல்கள் யாது? = 105 பாடல்கள்

338) நாலாயிரத்திவ்விய பிரபந்த நூலுக்கு உரை எழுதியவர் யார்? = பெரிய வச்சான் பிள்ளை

339) திருவாய்மொழிக்கு யார் எழுதிய பேருரை ஆழமும் அகலமும் உடையதாகும் என்று கூறப்படுகிறது? = வடக்குத் திருவீதிப் பிள்ளை

340) மணிமேகலை நூலின் ஆசிரியர் யார்? = மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

341) சீத்தலைச் சாத்தனாரின் வேறு பெயர் யாது? = தண்டமிழ் ஆசான்

342) சீத்தலைச் சாத்தனார் என்ற துறவி வாழ்ந்த காலம் எது? = கி.பி 2 ஆம் நூற்றாண்டு

343) மணிமேகலை எந்த சமயக் காப்பியமாகும்? = புத்த சமயக் காப்பியம்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

344) மணிமேகலை நூலின் வேறு பெயர் யாது? = மணிமேகலை துறவு

345) மணிமேகலை நூலில் காதைகள் இடம்பெற்றுள்ள அமைப்பைக் கூறுக? = இந்திர விழவூரெடுத்த காதை முதலாக பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகள் கொண்டது

346) சீவக சிந்தாமணிக்கு நிகரான நூல் என்று கூறப்படும் நூல் எது? = நீலகேசி

347) நீலகேசியின் வேறு பெயர் யாது? = நீலகேசித் தெருட்டு

348) இரட்சணியம் என்பதன் பொருள் யாது? = ஆன்ம ஈடேற்றம்

349) ஜான் பனியன் எழுதிய நூல் எது? = பில்கிரிம்ஸ் பிராகிரஸ்

350) பில்கிரிம்ஸ் பிராகிரஸ் என்ற நூலை தழுவி எழுதப்பட்ட நூல் எது? = இரட்சணிய யாத்திரிகம்

351) இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலை எழுதியவர் யார்? = எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை

352) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் பிறந்த ஊர் எது? = கரையிறுப்பு

353) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்களின் முழுப்பெயர் யாது? = ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணப்பிள்ளை

354) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் இயற்றிய வேறு நூல்கள் யாது? = இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், போற்றித் திருவகவல் ஆகியவை

355) இரட்சணிய யாத்திரிக நூலினுள் எந்த பெயரில் அமைந்த இசைப்பாடல்கள் நெஞ்சுருகச் செய்கின்றன? = தேவாரம்

356) கிறித்துவக் கம்பர் என்று போற்றப்படும் கவிஞர் யார்? = எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை

357) சீறாப்புராணத்தை தமிழ் மரபுக் கேற்ப பெருங்காப்பியமாக மக்களுக்கு செய்தளித்த புலவர் யார்? = உமறுப்புலவர்

358) உமறுப்புலவர் பிறந்த ஊர் எது? = தூத்துக்குடி மாவட்டம் - நாகலாபுரம் என்னும் ஊரில்

359) உமறுப்புலவரின் தந்தை பெயர் யாது? = செய்கு முகமது அலியார்

360) உமறுப்புலவரின் ஆசிரியர் பெயர் யாது? = எட்டயபுரம் மன்னரின் அவைப் புலவராக விளங்கிய கடிகை முத்துப் புலவரிம் மாணவர்

361) உமறுப்புலவரின் காலம் எது? = 17 ஆம் நூற்றாண்டு

362) யார் வேண்டுகோள் இணங்க உமறுப்புலவர் அவர்கள் சீறாப்புராணத்தை இயற்றினார்? = வள்ளல் சீதக்காதி

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 22 of 48.

363) வள்ளல் சீதக்காதி இறந்த பிறகு சீறாப்புராணம் நூலை இயற்றுவதற்கு உதவி புரிந்தவர் யார்? = அபுல் காசிம்

364) நபிகள் நாயகத்தின் வரலாறு முழுமையாக முடிவுபெற்ற நூல் எது? = சின்ன சீறா

365) சின்ன சீறா என்ற நூலை இயற்றியவர் யார்? = பனு அகமது மரைக்காயர்

366) உமறுப்புலவர் இயற்றிய வேறு நூல்கள் எது? = முதுமொழிமாலை, சீதக்காதி நொண்டி நாடகம் ஆகியவை

367) மங்கலம் கூறி நிறைவு செய்யும் செய்யுள்கள் எவ்வாறு உரைக்கப்படுகின்றன? = திருக்கடைக்காப்பு என்றும் பலச்ருதி என்றும் உரைக்கப்படுகிறது

368) இயற்றமிழின் இருவகைகள் எது? = செந்தமிழ் மற்றும் கொடுந்தமிழ்

369) இசைத் தமிழ் என்பது யாது? = பண்ணொாடு கலந்துந் தாளத்தொடு கூடியுமியங்குஞ் செந்தமிழ் பாட்டுக்களானுங் கொடுந்தமிழ் பாட்டுக்களானு மியன்ற இலக்கியங்களும் அவற்றினிலக்கண நூல்களில் தொகுதி ஆகும்

370) இசைத் தமிழுக்கு எ.கா கூறப்படும் முற்காலத்தில் தோன்றிய நூல்கள் சிலவற்றைக் கூறுக? = பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளவகையோத்து ஆகியவை

371) இசைத் தமிழுக்கு எடுத்துக்காட்டாய் கூறப்படும் இடைக்காலத்தில் தோன்றிய நூல் எது? = தேவாரம்

372) இசைத் தமிழுக்கு எ.கா கூறப்படும் இக்காலத்தில் தோன்றிய நூல்கள் சிலவற்றைக் கூறுக? = கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை ஆகியவை

373) உலகத்தினியல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவது எது? = நாடகத் தமிழ்

374) கேள்வி இன்பத்தில் மட்டும் பயனுடையதாக இருக்கும் தமிழ் எது? = இயற்றமிழ் மற்றும் இசைத்தமிழ்

375) கேள்வி இன்பம் மற்றும் காட்சி இன்பத்தையும் சேர்த்து கொடுப்பவை எது? = நாடகத்தமிழ்

376) சுதேசாபிமானம் என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ் பொருள் யாது? = தாய்நாட்டுப்பற்று

377) சுபாஷாபிமானம் என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ் பொருள் யாது? = தாய் மொழிப்பற்று

378) பாகதங்கள் என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ் பொருள் யாது?? = பிரிவுகள்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

379) தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் கொண்ட மொழி____எனப்படும்? = தனிமொழி

380) தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பல மொழிகட்குந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவுடைமையுள்ள மொழியே____எனப்படும்? = உயர் மொழி

381) 'திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகழ் செம்மொழி' என்று கூறியவர் யார்? = சூரியநாராயண சாஸ்திரி

382) மனிதன் தன் வாழ்வில் விடவேண்டிய அழுக்காறுகள் எவை என்று திரு.வி.க அவர்கள் கூறுகிறார்? = நாடு, மொழி, சமயநெறி, சாதி ஆகியவை

383) எல்லா மொழிகட்கும் அடிப்படை ஒன்றே, அஃது ஒலி அல்லது நாதம் - என்று கூறியவர் யார்? = திரு.வி.க

384) 'எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்சோதி' - என்று அருளியவர் யார்? = இராமலிங்க சுவாமிகள்

385) 'சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்த்தேன் சாத்திரக் குப்பையுந் தணந்தேன்' - என்ற பாடலை பாடியவர் யார்? = இராமலிங்க சுவாமிகள்

386) மேலைநாட்டு அறிஞரான ஜான்ஸன் இடத்தில் 'கவிதை என்பது யாது?' என்ற வினாவை எழுப்பியவர் யார்? = பாஸ்வெல்

387) ஒளியை நாம் அறிவோம். ஆனால் அது இன்னதென்று சொல்வது எளிதல்ல. இதுபோலவே தான் கவிதையும். கவிதை இது அல்ல, இது அல்ல, என எளிதில் கூறிவிடலாம். ஆனால், இன்னது தான் கவிதை என்று வரையற்றுத்தல் எளிதல்ல - என்று ஜான்ஸன் யாரிடம் கூறினார்? = பாஸ்வெல்

388) வசனத்திற்கும் கவிதைக்கும் ஓர் இலக்கணம் வகுத்தவர் யார்? = கோலரிட்ஜ்

389) 'சொற்களை சிறந்த முறையில் வைப்பது வசனம் என்றும் சிறந்த சொற்களை சிறந்த முறையில் வைப்பது கவிதை' என்று கூறியவர் யார்? = கோலரிட்ஜ்

390) கோலரிட்ஜ் அவர்களின் நண்பர் பெயர் யாது? = வோர்ட்ஸ்வொர்த்

391) 'ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை' என்று கூறியவர் யார்? = வோர்ட்ஸ்வொர்த்

392) 'கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை கவிதை என்று கூறியவர் யார்? = கீட்ஸ்

393) கவிதை என்பது ஆற்றலின் சிகரம் என்றும், 'ஆற்றல் தனது வலப் புயத்தில் தலை சாய்த்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை' என்று கவிதையை பற்றி கூறிய அறிஞர் யார்? = கீட்ஸ்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 

394) 'பேராசிரியர் எஸ்.வையாபுரி பிள்ளை கூறும் கவிதையின் இயல்புகள் மொத்தம் எத்தனை? - அவை யாவை :-

1) முதல் இயல்பு - செய்யுள் வடிவில் அமைந்திருத்தல் வேண்டும்
2) இரண்டாம் இயல்பு - உலக உண்மைகளைக் காட்டிலும், பாவனா சக்தியின் இயல்புகளை பெரும்பாலும் மேற்கொள்ள வேண்டும்
3) மூன்றாவது இயல்பு - கவிதை ஒரு கலை. இன்பம் விளைத்தலே அதன் தலையாய நோக்கம் என்பது வெளிப்படை
4) நான்காவது இயல்பு - ஆன்மாவின் இயல்புகளை வெளியிடும் கவிதைகளே சிறாந்த கவிதைகள்

395) 'சீரிய உணர்ச்சிக்குரிய காரணங்களைப் பாவனாசக்தியால் குறிப்பிடுவதே கவிதையாகும்' - என்று கவிதையைப் பற்றி கூறியவர் யார்? = ஜான் ரஸ்கின்

396) 'பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போறபல' என்ற பாடல் மூலம் கவிதை பற்றி கூறிய அறிஞர் யார்? = பவணந்தி

397) 'பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ' - என்று பாடியவர் யார்? = கம்பர்

398) சமீப காலத்தில் 'எல்லா கவிஞர்களும் பைத்தியக்காரர்களே' என்ற முடிவுக்கு வந்த அறிஞர் யார்? = இராபர்ட் பட்டன்

399) 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' - என்று பாடிய புலவர் யார்? = பாரதியார்

400) யாருடைய கவிதகள் எளியதாய் வெள்ளையாய் உள்ளன என்று பேராசிரியர் எஸ்.வையாபுரி பிள்ளை கூறுகிறார்? = கம்பர்

401) 'புவியினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி' - என்ற பாடலை பாடியவர் யார்? = கம்பர்

402) வாழ்க்கையில் முயற்சி செய்பவர்களை 'முயல்வாரு ளெல்லாந் தலை' - என்று சிறப்பித்தவர் யார்? = திருவள்ளுவர்

403) 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = நற்றிணை

404) 'உள்ளது சிதப்போர் உளரெனப் படாஅர்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = குறுந்தொகை

405) 'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும், கூனும் குறளும் ஊமும் செவிடும்' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு

406) 'காணார், கேளார், கால்முடப்பட்டோர், பேணா மக்கள், பேசார், பிணியோர்' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = மணிமேகலை


Download more study materials visit www.tnpsctamil.in 25 of 48.

407) ‘உலகம் நாடாகவது இருக்கட்டும்; காடாகவாவது இருக்கட்டும்; எங்கே நல்லவர்களிருக்கின்றார்களோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும்’ - என்ற கருத்துக் கொண்ட பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல் எது? = புறநானூறு

408) மக்கள் நாகரிகம் எத்தனை நிலைகள் கொண்ட்தாக பாவாணர் கூறுகிறார்? = 4 நிலைகள் - அவை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், நகரம் ஆகியவை

409) முதன் முதலில் குறிஞ்சி நிலத்திற்கே உரிய விலங்கு எது? = ஆ - பசு

410) ‘பகடு நடந்த கூழ்’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = நாலடியார்

411) ‘முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும்’ - என்ற வரி பாடப்பட்டுள்ள நூல் எது? = தொல்காப்பியம் - அறுமுறை வாழ்த்து பகுதி உரையில்

412) ‘முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும்’ என்னும் அறுவரை வாழ்த்தல் என்று உரைத்தவர் யார்? =நச்சினார்க்கினியர்

413) ‘வாழ்க அந்தணர் வானாவர் ஆனினம்’ - என்று கூறியவர் யார்? = திருஞானசம்பந்தர்

414) ‘கோவனும் மக்களும்’ அரசன் கையிலுள்ள செங்கோலும் அவன் ஆயன் போன்றவன் என்னுங் கருத்தை வலியுறுத்தும் நூல் எது? = சீவக சிந்தாமணி

415) கிறித்தவரின் சமய ஆசிரியர் ஆங்கிலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டார்? = மேய்ப்பர் (Shepherd)

416) கோவன் - சிவன் என்ற வார்த்தை இடம்பெற்றுள்ள நூல்கள் யாது? = அகநானூறு மற்றும் நித்திலக்கோவை

417) ‘கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்’ - என்று திருக்குறளை போற்றியவர் யார்? = இடைக்காடனார்

418) ‘அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட மறுசிகை நீக்கியுண் டாரும்’ - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = நாலடியார்

419) சில ஆண்டுகளுக்கு எங்கு நடந்த அகழ்வாராய்ச்சியில் புத்த விகாரம் என்றும் பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் முகத்துவாரக் கட்டடமும் அகழ்வாய்வில் கண்டறியப்பட்டன? = பூம்புகார்

420) தமிழகத்தில் இன்று காணப்பெறும் கோவில்களில் மிகவும் பழமையான குடைவரைக் கோவில் எது? = இராமநாதபுரம் மாவட்ட்த்தை சேர்ந்த பிள்ளையார்பட்டி என்னும் ஊரின் கோவில்

421) எந்த ஆண்டு முதல் குடைவரைக் கோவில்கள் அமைக்கும் பணி முற்றிலுமாக நின்று போனது? = கி.பி 9 ஆம் நூற்றாண்டு

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 26 of 48.

422) தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக்கும் முறைகள் எந்த மன்னர்கள் காலத்தில் நிலவி இருந்தன? = பல்லவர் மற்றும் பாண்டியர் காலம்

423) எந்த ஆண்டு முதல் தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக்கும் படைக்கும் முறைகள் நின்று விட்டது? = கி.பி 8 ஆம் நூற்றாண்டு

424) கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோவில் பணி எந்த மன்னர்கள் காலத்தில் நிலவி வந்தது? = பல்லவர் மற்றும் பாண்டியர்

425) கோவில்களில் கோபுரம் அமைத்தல் யாருடைய காலத்தில் தொடங்கி யாருடைய காலத்தில் உன்னத நிலையை அடைந்தது? = பல்லவர் காலத்தில் தொடங்கி விஜயநகர காலத்தில் உன்னத நிலையை அடைந்தது

426) மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் சிலவற்றைக் கூறுக :

| கோவில்கள் | எந்த காலத்தில் கட்டப்பட்ட்து | கோவில் உள்ள ஊர் |
|---|---|---|
| கடற்கரை கோவில் | பல்லவர் காலம் | மாமல்லபுரம் |
| கைலாயநாதர் கோவில் | பல்லவர் காலம் | காஞ்சிபுரம் |
| திருத்தளிநாதர் கோவில் | பாண்டியர் காலம் | திருப்பத்தூர் |
| விசயாலய சோழீச்சுரம் | சோழர் காலம் | நார்த்தாமலை |
| இராசராசேச்சுரம் என்னும் தஞ்சை பெருவுடையார் கோவில் | சோழர் காலம் | தஞ்சை |
| கங்கை கொண்ட சோழீச்சுரம் | சோழர் காலம் | கங்கை கொண்ட சோழபுரம் |
| ஐராவதேசுவரர் கோவில் | சோழர் காலம் | தாராசுரம் |
| திரிபுவன வீரேச்சுரம் | சோழர் காலம் | திரிபுவனம் |

427) யானையின் உருவத்தைச் செதுக்குவதில் எந்த மன்னர் காலத்து சிற்பிகள் கைதேர்ந்தவர்களாக விளங்கினர்? = பல்லவர் காலத்து சிற்பிகள்

428) சோழர்கால சிற்பிகளின் சிற்பக்கலை வல்லமைக்கு உதாரணமாக கூறப்படும் சிற்பங்கள் எது? = இராமாயண காட்சிகள் மற்றும் சிவபுராணாக் காட்சிகள் ஆகியவை

429) விஜயநகர நாயக்கர் காலத்தில் எந்த கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து சிற்பம் செதுக்கப்பட்டது? = மனிதத் தன்மைக்கும் உடற்கூறுகளுக்கும் தரப்பட்டன

430) எந்த ஆண்டுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் செப்புப்படிமக்கலை மிக உன்னத நிலையில் வளர்ச்சி பெற்றிருந்தது? = சுமார் 2800 ஆண்டுக்கு முன்பிருந்து

431) தெய்வச் செப்புத் திருமேனி என்னும் செப்புப்படிமக்கலை கண்டறியப்பட்ட இடம் எது? = திருநெல்வேலி மாவட்டம் - ஆதிச்சநல்லூர்

திருப்பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 27 of 48.

432) பல்லவர் காலத்தின் செப்புத்திருமேனிகளுக்கு உதாரணமாக கூறப்படும் சில இடங்கள் எது? = கூரம் நடராசர், கொடுமுடி திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி ஆகியவை

433) யாருடைய காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது? = சோழர் காலம்

434) செப்புத்திருமேனிகள் செய்தளிப்பதைத் தாம் இம்மண்ணுலகத்தில் பிறந்ததன் கடமை என்று எண்ணிச் செய்தளித்த சோழ பேரரசி யார்? = செம்பியன் மாதேவி

435) 'எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி' - என்று ஓவியத்தை பற்றிக் கூறும் வரிப்பாடல் காணப்படும் நூல் எது? = மதுரைக்காஞ்சி

436) 'மையறு படிவத்து வானவர் முதலான எவ்வகையுயிர்களும் உவமங் காட்டி' - என்று ஓவியத்தை பற்றிக் கூறும் வரிப்பாடல் காணப்படும் நூல் எது? = மணிமேகலை

437) தமிழ்நாட்டில் எந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து ஓவியங்கள் காணப்படுகின்றன? = கி.பி.7 ஆம் நூற்றாண்டு

438) ஓவியக்கலையில் சிறந்து விளங்கிய பல்லவ மன்னன் யார்? = மகேந்திரவர்மன்

439) எழிலார்ந்த ஆடல் மகளின் ஓவியம் காணப்படும் கோவில் எது? = பனமலையில் உள்ள மண்டபம்

440) மரச் சிற்பக்கலை எந்த நூற்றாண்டிலிருந்து காணப்படுகிறது? = கி.பி.16 ஆம் நூற்றாண்டு

441) 'கொள்கை இல்லாத அரசியல், உழைப்பு இல்லாத செல்வம், நேர்மை இல்லாத வணிகம், ஒழுக்கம் இல்லாத கல்வி, மனசாட்சி இல்லாத மகிழ்ச்சி, மனித நேயம் இல்லாத அறிவியல், தியாகம் இல்லாத வழிபாடு இவை கொடிய பாவங்கள் என்ற கருத்தை கூறியவர் யார்? = காந்தி

442) வாக்கியத்தில் உண்டாகும் பிழைகளை நீக்குக :

| வாக்கிய பிழை | பிழை திருத்தம் |
|---|---|
| வண்டிகள் ஓடாது | வண்டிகள் ஓடா |
| அவை இங்கே உளது | அவை இங்க்ற் உள |
| அது எல்லாம் | அவை எல்லாம் |
| மக்கள் கிடையாது | மக்கள் இல்லை |
| வருவதும் போவதும் கிடையாது | வருவதும் போவதும் கிடையா |
| ஒன்றோ அல்லது இரண்டோ தருக | ஒன்றோ இரண்டோ தருக |
| சென்னை என்ற நகரம் | சென்னை என்னும் நகரம் |
| எனது மகன் | என் மகன் |
| ஏற்கத்தக்கது அல்ல | ஏற்கத்தக்கது அன்று |
| அவளது தந்தை | அவள் தந்தை |

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 28 of 48.

443) **சில அலுவலக கலைச்சொற்களுக்கு தமிழாக்கம் தருக :**

| அலுவலகச் சொல் | தமிழாக்கம் |
| --- | --- |
| ரெக்கார்ட் | ஆவணம் |
| செகரட்டரி | செயலர் |
| மேனேஜர் | மேலாளர் |
| பைல் | கோப்பு |
| புரோநோட் | ஒப்புச் சீட்டு |
| பால்கனி | முகப்பு மாடம் |
| பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு |
| டிசைன் | வடிவமைப்பு |
| சாம்பியன் | வாகைசூடி |
| விசா | நுழைவுஇசைவு |
| டெலிகேட் | பேராளர் |
| ஸ்பெஷல் பஸ் | தனிப் பேருந்து |
| புரபோசல் | கருத்துரு |
| ஆட்டோ கிராப் | வாழ்த் தொப்பம் |
| விசிட்டிங் கார்டு | காண்புச் சீட்டு |
| பிரீப் கேஸ் | குறும் பெட்டி |
| லம்சம் | திரட்சித் தொகை |
| மெயின் ரோடு | முதன்மைச் சாலை |
| புரோட்டோ கால் | மரபுத்தகவு |
| செக் | காசோலை |
| ரசீது | பற்றுச்சீட்டு |

திரு பழனி முருகன் B.E

444) **ண, ந ன வேறுபாடு அறிந்து பொருள் தருக :**

| | |
| --- | --- |
| அரண் | மதில், பாதுகாப்பு, கோட்டை |
| அரன் | சிவன் |
| அண்ணம் | மேல்வாய் |
| அன்னம் | ஒரு பறவை |
| ஆணி | கூரிய இரும்புத்துண்டு |
| ஆனி | ஒரு மாதம் |
| ஆணை | கட்டளை |
| ஆனை | யானை |
| உண்ணு | சாப்பிடு |
| உன்னு | நினைத்துப்பார் |
| எண்ண | நினைக்க, எண்ணிப்பார்க்க |
| என்ன | கேள்வி |
| கணை | அம்பு |
| கனை | கனைத்தல் |
| கணம் | நேரம் |
| கனம் | பளு, சுமை |


Download more study materials visit www.tnpsctamil.in 29 of 48.

| | |
|---|---|
| காண் | பார் |
| கான் | காடு |
| தணி | அடங்கு |
| தனி | தனித்திருத்தல் |
| துணி | சீலை |
| துனி | துன்பம், கோபம், அச்சம் |
| திணை | நிலம், ஒழுக்கம் |
| தினை | தானிய வகை |
| நாண் | கயிறு |
| நான் | தன்னைக் குறிப்பது, |
| திண்மை | வலிமை |
| தின்மை | தீமை |
| வண்மை | வளம், வழங்குதல் |
| வன்மை | வலிமை |

445) மரபுச் சொற்களை அறிக :

பலாப்பிஞ்சு - பலாமுசு

அவரைப் பிஞ்சு - அவரைப்பொட்டு

வாழைப்பிஞ்சு - வாழைக் கச்சல்

மாம்பிஞ்சு - மாவடு

முருங்கைப் பிஞ்சு - முருங்கைச் சரடு

இளந்தேங்காய் - வழுக்கை

முற்றிய தேங்காய் - நெற்று

446) ல, ள, ழ வேறுபாடு அறிந்து பொருள் தருக :

| | |
|---|---|
| அலை | கடல் அலை, அலைந்து திரிதல் |
| அழை | கூப்பிடு |
| அளை | தயிர், பிசை |
| இலை | மரம், செடி, கொடிகளின் இலை |
| இழை | செய், நூல் இழை |
| இளை | மெலிந்து போதல் |
| உலை | சமைக்க உலை வைத்தல் |
| உழை | பாடுபடுதல், உழைப்பு |
| உளை | பிடரிமயிர், சேறு |
| ஒலி | ஓசை |
| ஒழி | அழித்துவிடு, தொலைத்து விடு |
| ஒளி | வெளிச்சம், பதுங்கிக் கொள் |
| கலை | வித்தை, கலைந்து போதல் |
| கழை | மூங்கில் |
| களை | வயலில் களையெடுத்தல், முகத்தின் ஒளி |

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 30 of 48.

| | |
|---|---|
| கிலி | அச்சம், பலம் |
| கிழி | துண்டாகக் கிழித்தல், கோடு கிழித்தல் |
| கிளி | ஒரு பறவை |
| தலை | முதன்மை, சிரசு |
| தழை | புல், இலை |
| தளை | கட்டுதல் |
| தாலி | கணவன் மனைவிக்கு கட்டும் சின்னம் |
| தாழி | குடம், வாயகன்ற பாண்டம் |
| தாளி | ஒருவகைப் பனை, குழம்பு தாளித்தல் |
| வலை | மீன் பிடி வலை |
| வழை | ஒருவகை மரம், சுரபுன்னை மரம் |
| வளை | பொந்து, வளையல், வளைவு |
| வால் | விலங்கின் வால்பகுதி, வெண்மை |
| வாழ் | உயிர்வாழ், பிழைத்திரு |
| வாள் | வெட்டும் கருவி, ஒளி பொருந்திய |
| வாலை | இளம்பெண் |
| வாழை | மரவகை |
| வாளை | மீன்வகை |

447) வடமொழியில் மாற்றப்பட்ட ஊர் பெயர்கள் சிலவற்றைக் கூறுக :

| ஊர் பெயர்கள் | தற்போது அழைக்கப்படும் வடமொழி பெயர்கள் |
|---|---|
| திருவரங்கம் | ஸ்ரீரங்கம் |
| திருச்சிற்றம்பலம் | சிதம்பரம் |
| திருமறைக்காடு | வேதாரணியம் |
| திருமுதுகுன்றம், பழமலை | விருத்தாசலம் |
| அங்கயற்கண்ணி | மீனாட்சி |
| அறம்வளர்த்தாள் | தர்மசம்வர்த்தனி |
| எரிசினக் கொற்றவை | ரௌத்திர துர்க்கை |
| ஐயாறப்பர் | பஞ்சநதீசுவரர் |
| குடமூக்கு | கும்பகோணம் |
| வாள்நெடுங்கண்ணி | கட்கநேத்ரி |
| செம்பொன்பள்ளியார் | சொர்ணபுரீச்சுரர் |
| நீள்நெடுங்கண்ணி | விசாலாட்சி |
| யாழினும் நன்மொழியாள் | வீணாமதுரபாஷிணி |
| தேன்மொழிப்பாவை | மதுரவசனி |
| பழமலைநாதர் | விருத்தகிரீச்சுரர் |

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 31 of 48.

448) சில திசைச்சொற்களும் அவைச் சார்ந்த மொழிகளும் :

| திசைச்சொற்கள் | எந்த மொழிச்சார்ந்த சொற்கள் |
|---|---|
| குல்லா | பார்ஸி |
| ரிக்சா | ஜப்பானி |
| பஜார் | பார்ஸி |
| அலமாரி | போர்ச்சுகீசியம் |
| எக்கச்சக்கம் | தெலுங்கு |
| நபர் | அரபி |
| பேனா | போர்ச்சுகீசியம் |
| இனாம் | உருது |
| ரூபாய் | இந்துஸ்தானி |
| ஜாஸ்தி | உருது |
| துட்டு | டச்சு |
| பீரோ | பிரெஞ்சு |
| கடுதாசி | போர்ச்சுகீசியம் |

திரு.பழனி முருகன் B.E

449) இலக்கிய வளம் கூறும் நூல்களின் நூல் அமைப்பு :

| நூல் | பெரும் பிரிவு | சிறு பிரிவு | பாடல்கள் |
|---|---|---|---|
| தொல்காப்பியம் | 3 அதிகாரம் | 27 இயல்கள் | 1610 நூற்பாக்கள் |
| திருக்குறள் | 3 பால்கள் | 133 அதிகாரங்கள் | 1330 குறள்கள் |
| சிலப்பதிகாரம் | 3 காண்டம் | 30 காதைகள் | 5001 வரிகள் |
| மணிமேகலை | --- | 30 காதைகள் | 4755 வரிகள் |
| சீவகசிந்தாமணி | --- | 13 இலம்பகங்கள் | 3145 பாடல்கள் |
| பெரியபுராணம் | 2 காண்டம் | 13 சருக்கங்கள் | 4286 பாடல்கள் |
| கம்பராமாயணம் | 6 காண்டங்கள் | 118 படலங்கள் | 10589 பாடல்கள் |
| நல்லாப்பிள்ளை பாரதம் | ----- | 18 பருவங்கள் | 11000 பாடல்கள் |
| கந்தபுராணம் | 6 காண்டம் | 135 படலங்கள் | 10345 பாடல்கள் |
| திருவிளையாடற் புராணம் | 3 காண்டம் | ---- | 3363 பாடல்கள் |
| தேம்பாவணி | 3 காண்டம் | 36 படலங்கள் | 3615 பாடல்கள் |
| சீறாப்புராணம் | 3 காண்டம் | 92 படலங்கள் | 5027 பாடல்கள் |
| இரட்சணிய யாத்திரிகம் | 5 பருவங்கள் | 47 படலங்கள் | 3776 பாடல்கள் |
| இராவண காவியம் | 5 காண்டம் | 57 படலங்கள் | 3100 விருத்தங்கள் |
| ஏசு காவியம் | 5 பாகம் | 149 அதிகாரம் + 810 விருத்தங்கள் | 2346 அகவலடிகள் |

450) **அருஞ்சொற்பொருள் தருக :**

ஒன்றேயென்னின் - ஒன்றே என்று கூறின்
நம்பி - இறைவன்
நன்று - வியப்பிற்குரியது
நண்ணும் - கிட்டிய, வாய்த்த
இசைத்த - பொருந்தச் செய்த
வண்ணம் - ஓசை, சந்தம்
தினந்தினம் - நாள்தோறும்
மாள - சாக
வாடின - தளர்ந்த, சோர்வுற்ற
ஓடின - மறைந்தன
எண்ணத்தைக் கூடு - எண்ணத்தைக் கொள்
பல்சான்றீரே - பலராகிய சான்றோரே
கயன்முள் - மீன்முள்
திரைகவுள் - சுருக்கங்களுடைய கன்னம்
கணிச்சி - மழுவாயுதம்
கூர்ம்படை - கூரிய ஆயுதம்
கடுந்திறல் - கடிமையான வலிமை
ஒருவன் - யமன்
பிணிக்கும் - கட்டிக்கொண்டு போகும்
நல்லாறு - நன்னெறி
நெறியும் - வழியும்
ஓம்புமின் - தவிர்த்துவிடுவீர்
பச்சை - தோல்
மாச்சிறைப் பறவை - கரிய சிறகுகளையுடைய வௌவால்
சேயுயர் - மிக உயர்ந்த
சினைய - கிளைகளையுடைய
புலம்பட - தனித்திட
முகை - மொட்டு
கடிமகள் - மணமகள்
கதுப்பு - கூந்தல்
தண்பதம் - குளிர்பதம்
மழைக்கண் - குளிர்ந்த கண்
புரவி - குதிரை
வலவ - தேர்ப்பாகனே
வினை - செயல்
இறவு - இறாமீன்
முதல் - அடி
பிணர் - சருச்சரை
தடவு - பெருமை
சுறவு - சுறாமீன்
களிறு - ஆண்யானை
மருப்பு - தந்தம்
உழை - பெண்மான்
உரவு - வலிமை

இனமணி - மணிகளின் தொகுதி
இயக்க - செலுத்த
செலீஇய - செல்லும் பொருட்டு
சின்னாள் - சிலநாள்
ஒழுகுநீர் - ஓடுகின்ற நீர்
ஆரல் - ஆரல்மீன்
குருகு - நாரை
மறு - குற்றம்
தூவி - இறகு
மரபு - முறைமை
ஓதி - கூந்தல்
கிளை - சுற்றம்
பச்சூன் - பசிய ஊன்
ஊன் - தசை
வல்சி - உணவு
விறல் - வலிமை
காளை - தலைவன்
வையகம் - மண்ணுலகம்
வானகம் - விண்ணுலகம்
ஆற்றலரிது - ஒத்தலரிது
தூக்கார் - ஆராய்தவலராய்
தினை - மிகச் சிறிய அளவு
பனை - ஒரு பேரளவு
வரைத்து - அளவையுடையது
மாசற்றார் - குற்றமற்றவர்
கேண்மை - நட்பு
விழுமம் - துன்பம்
உள்ள - நினைக்க
நன்றி - அறம், உதவி
அகழ்வாரை - தோண்டுபவரை
இகழ்வார் - அவமதிப்பார்
பொறுத்தல் - மன்னித்தல்
இன்மை - வறுமை
ஒரால் - நீக்குதல்
வன்மை - வலிமை
மடவார் - அறிவிலிகள்
நிறை - சால்பு
ஒறுத்தாரை - தண்டித்தவரை
பொன்றும் - அழியும்
இன்னா - தீய
அற்றம் - அறிவு
செறுவார்க்கு - பகைவர்க்கு
அரண் - கோட்டை
ஓரீஇ - நீக்கி
தழீஇயது - நட்பாக்குவது
ஒட்பம் - அறிவுடைமை

திரு பழனி முருகன் B.E


Download more study materials visit www.tnpsctamil.in 34 of 48.

கூம்பல் - குவிதல்
பேதைமை - அறிவுஇன்மை
நோய் - துன்பம்
இலர் - இல்லாதவர்
திட்பம் - வலிமை
ஒரால் - செய்யாமை
ஒல்காமை - தளராமை
ஆறு - நெறி
கடை - இறிதியில்
எற்றா - நீங்காத
விழுமம் - துன்பம்
வீறு - சிறப்பு
எய்தி - பெற்று
எய்துப - அடைவர்
துளங்காது - சோம்பலின்றி
தூக்கம் - நீட்டித்தல்
உறவரின் - மிகுந்து வருமாயின்
வெய்யோன் - கதிரவன்
ஈர்வளை - அறுத்துச் செய்யப் பெற்ற வளையல்
இலங்கு - ஒளிருகின்ற
தோளி - தோளையுடைய கண்ணகி
முறை - நீதி
நிறை - கற்பு
படுகாலை - மாலைக்காலம்
உறாதது - பிறர் அடையாத துன்பம்
மாதர் - காதல்
தீதறு நல்லுரை - குற்றமற்ற இனிய மொழி
நோதக்க செய்தாள் - வருந்தத்தக்கன செய்தாள்
எள்ளல் - இகழ்க
அல்லலுற்று - வருத்தமுற்று
ஆற்றாது - தாங்கமாட்டாது
மல்லல் - வளம்
கொற்றம் - அரசியல்
வம்பப் பெருந்தெய்வம் - புதியதாக வந்த பெரிய தெய்வம்
ஐஅரி உண்கண் - அழகிய செவ்வரிப்படர்ந்த, மையுண்டகண்கள்
இனைந்து - வருந்தி
கம்பலைமாக்கள் - ஆரவாரித்துத்திரியும் மக்கள்
புல்லென்மருள்மாலை - ஒளிமழுங்கித் தோன்றும் மாலை
கொழுநர் - கணவர்
வைவாள் - கூரிய வாள்
வாண்முகம் - ஒளிபொருந்திய முகம்
தப்பிய - தவறிய
மாற்ற - துடைக்க
பழுது - உடல்
ஏந்தல் - சிறந்தோன்
கழல் - திருவடி

திரு பழனி முருகன் B.E

முளரி - தாமரை
தையல் - சீதாப்பிராட்டி
வையகம் - தரை
வையகம் தழீஇ - தரையில் வீழ்ந்து
இறைஞ்சி - வணங்கி
திண்டிறல் - இராமபிரான்
ஓதி - கூந்தல்
மற்று - மேலும்
பன்னுவான் - உரைப்பானாயினான்
திரை - அலை
மன் - தயரதன்
மருகி - மருமகள்
தனயை - மகள்
தடந்தோள் - அகன்றதோள்
இரும்பொறை - வலிய பொறுமை
வீங்கு நீர் - பரந்து பெருகிய கடல்
வெற்பு - மலை
உம்பி - உன் தம்பி
வேலை - கடல்
விண்தோய் - வானளாவிய
களி நடனம் - ஆனந்த நடனம்
கனகம் - பொன்
அணங்கு அன்னாள் - தெய்வம் போல்வாள்
அலங்கு - ஒளிமிகுந்த
கோறல் - கொல்லுதல்
அலங்கல் - மாலை
உறைப்ப - அழுத்தமாக
உன்னினள் - நினைந்தனள்
திருக்கம் - வஞ்சனை
முறிவு - வேறுபாடு
மருந்து - அமிழ்தம்
இயம்பலள் - பேச்சொன்றும் பேசினாளல்லள்
எய்த்தமேனி - இளைத்த உடம்பு
வீங்கினள் - பூரித்தாள்
ஆழி - மோதிரம்
விண்டாள் - வெளிப்படுத்தினாள்
வருத்தப்பாடு - துன்பம்
உயிர்ப்பு - பெருமூச்சு
இயைபுளி - பொருத்தமற்ற, முறையாக
திங்கள் - மாதம்
மாமணிக்கரசு - சூடாமணி
கதுவிடா - கைப்பற்றமுடியாத
மாலி - சூரியன்
கதிர் வகுத்த - ஒளி வீசிய
நாப்பண் - நடுவில்
ஆலி - மழை நீர்

கரு பழனி முருகன் B.E


Download more study materials visit www.tnpsctamil.in   36 of 48.

கரிந்து - கருகி
வேய்ந்த - கருமையை அணியாகப் போர்த்ர்கிக் கொண்ட
புடை - இடையின் ஒருபக்கம்
நெருங்கி - இறுகக்கட்டி
மாண்ட - சிறந்த
வியன்வட்டம் - அகன்ற கேடயம்
பொறுத்து - சுமந்து கொண்டு
அளித்த - ஒளிமிகுந்த
கீண்டு - கிழித்து
அளாவு - நிறைந்த
கிளர்ப்ப - நிறைய
கூர்த்த - ஆற்றல்மிக்க
தொழும்பர் - அடிமைகள்
ஆர்த்த - அழைத்த
ஓகையால் - களிப்பினால்
வெருவி - அஞ்சி
கதத்த - சினமிக்க
கல்நெடுங்குவடு - மலைச்சிகரம்
செருக்கு - அகந்தை
நிருபன் - அரசன்
இரிந்தபின் - கழிந்தபின்
துன்ன - நெருங்க
விளி - சாவு
கைவயம் - தோள்வலிமை
மெய்வயம் - உடல்வலிமை
புகைந்த - சின்ந்த
ஐஞ்சிலை - ஐந்து கற்கள்
ஓதை - ஓசை
மருகி - சுழன்று
வைவேல் - கூரியவேல்
மிடல் - வலிமை
எல்வை - தக்க சமயம்
வல்கை - வலிமை மிக்க கரங்கள்
ஒல்லை - விரைவாக
செல் - மேகம்
சிலைநுதல் - கல்போன்ற நெற்றி
எல்லை - கதிரொளி
உருமு, அசனி - இடி
மருங்கு - இடுப்பு
சிரம் - தலை
கூச - நாணுற
நாமவேல் - அச்சந்தரும்வேல்
தீத்தாவும் கண் - தீப்பொறி பறக்கும் கண்
மின் - மின்னல்
குறடு - அரண்மனை முற்றம்
தினையளவு - மிகச்சிறிதளவு

திருப்பதி முருகன் B.E


Download more study materials visit www.tnpsctamil.in 37 of 48.

பதடி - பதர்
பேழை - பெட்டி
தூளிகை - நிலா முற்றம்
சாளரம் - பலகணி
தெற்றி - திண்ணை
பாங்கரும் - பக்கத்தில் உள்ள இடங்களும்
பிணங்கி - நெருங்கி
மறுகு - தெரு
கோடி - வளைத்து
சதகோடி - நூறுகோடி
கற்கோடி - கோடியான கற்கள்
மகோததி - கடல்
ஏவ - செலுத்த
சோணாடு - சோழநாடு
மதியெறிந்து - சந்திரனை வீசி
தூங்கும்பதி - வானத்தில் நிலைகொண்டலைந்த ஊர்கள்
உதியர் - சேரர்
தம் சென்னி - தம் தலையால்
சரதம் - வாய்மை
பவித்திரம் - தூய்மை
கவித்த அபிடேகம் - சூட்டிய கீரிட்த்தை
மூவெழுகால் - இருபத்தோரு தலைமுறை
இருங்கடல் - பெரிய கடல்
கடத்தும்பி - மதயானை
தருவேம் கடத்து - மரங்கள் வேகின்ற காட்டில்
தத்துக்கு - ஆபத்தை ஒழிப்பதற்கு
கழல் - திருவடி
பதி - ஊர்
குஞ்சி - தலைமயிர்
போதன் - பிரமன்
வாசவன் - இந்திரன்
அந்தி - மாலை
மதிக்குள் - அறிவில்
வேலை - கடல்
மதிக்கும் - கடையும்
அங்கம் ஆம் கடம் - உடலாகிய காடு
அவியா - அணையாத
மத விளக்கு - ஞான விளக்கு
கடமால் - மதநீரினால் மயக்கமுடைய
ஐராவதம் - இந்திரனது யானை
இருக்கு ஆரணம் - இருக்கு வேதம்
கஞ்சம் - தாமரை மலர்
அணங்கு, மாயவன் - திருமகள்
ஏமவெற்பு - மேருமலை
ஏமம் - பொன்
மலயாசலம் - பொதியில் மலை


Download more study materials visit www.tnpsctamil.in 38 of 48.
திருப்பழனி முருகன் B.E

மதிப்பிஞ்சு - பிறை நிலா
மறுகுதல் - சுழலுதல்
பரிதி - சூரியன்
வன்னம் - அழகு
முகில் - மேகம்
பொய்கை - நீர்நிலை
இருட்கடல் - நீலக்கடல்
களஞ்சியம் - தொகுப்பு
மனோபாவம் - உளப்பாங்கு
இலகுவது - விளங்குவது
சுவடி - நூல்
சர்வகலா சாலை - பல்கலைக்கழகம்
வெய்யோன் - கதிரவன்
புரையோடி - உள்ளுக்குள் அரிக்கப்பட்டு
சோங்கி - வாட்டமுற்று
பகட்டு வாழ்க்கை - ஆடம்பரமான வாழ்க்கை
செட்டு - சிக்கனம்
சிந்தை - உள்ளம்
சந்தி - தெருக்கள் கூடுமிடம்
சிறுமை - இழிவு
மூடத்தனம் - அறியாமை
மூலதனம் - முதலீடு
கனக மால்வரை - பெரிய பொன்மாலை
ஆவணம் - அடிமையோலை
ஆனாத - குறைவு படாத
அரம்பையர்கள் - தேவமாதர்கள்
தீர்த்தன் - தூயன்
புராணன் - மிகப்பழையன்
ஏமம் - பாதுகாவல்
கடிந்தோன் - துறந்தோன்
ஆழியந்திருந்தடி - சக்கர ரேகையுள்ள திருவடி
சாமரை - சாமரம் ஆகிய வெண்கவரி
புடைபுடை - இருமருங்கினும்
இயக்கர் - கந்தருவர்
இரட்ட - அசைக்க
சிங்கவாசனம் - அரியணை
ஒளிமண்டிலம் - ஆலோகம், பிரபாமூர்த்தி, கனப்பிரபை
முக்குடை - சந்திராதித்தம், சகலாபாசனம், நித்தவிநோதம்
சந்திராதித்தம் - முத்துக்குடை
சகலாபாசனம் - பொற்குடை
நித்தவிநோதம் - மணிக்குடை
கன்னி - மரியன்னை
காசினி - உலகம்
வான்கதி - துறக்கம்
மருவ - அடைய
உபாசனா மூர்த்தி - வழிபடு கடவுள்

திருமுருகன் B.E

பொறி - ஒளிப்பிழம்பு
நவியார் - நபிகள் நாயகம்
நடுநாவில் - வாய் மொழியில்

451) **இலக்கண குறிப்பு வரைக :**

வாழ்க்கை - தொழிற்பெயர்
அம்மா - வியப்பிடைச்சொல்
அசைத்த, இசைத்த - பெயரெச்சங்கள்
உலகம் - இடவாகுபெயர்
திருந்துமொழி - வினைத்தொகை
வாழிய - வியங்கோள் வினைமுற்று
வாழிய வாழிய - அடுக்குத்தொடர்
அடிவாழ்த்துவம் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
வாழ்த்துவம் - தன்மைப் பன்மை வினைமுற்று
தினந்தினம் - அடுக்குத்தொடர்
வந்தவர், போனவர் - வினையாலனையும் பெயர்கள்
இல்லாதவர் - எதிமறை வினையாலணையும் பெயர்
யாரையும் - முற்றும்மை
கயன்முள் - ஆறாம் வேற்றுமைத் தொகை
திரைகவுள் - வினைத்தொகை
கூர்ம்படை, கடுந்திறல் - பண்புத்தொகைகள்
ஆற்றீர் - முன்னிலை பன்மை எதிர்மறை வினைமுற்று
ஓம்புமின் - ஏவல் பன்மை எதிர்மறை வினைமுற்று
படூஉம் - இசைநிறையளபெடை
உயர்சினை - வினைத்தொகை
சிறைப்பறவை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
பகலுறை - ஏழாம் வேற்றுமைத் தொகை
முதுமரம், தண்பதம், நல்லகம், அருந்துயர், நெடுந்தேர் - பண்புத்தொகைகள்
கடிமகள் - உரிச்சொற்றொடர்
புல்லர் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
வல்விரைந்து - ஒருபொருட்பன்மொழி
ஊர்மதி - முன்னிலை ஒருமை வினைமுற்று
இறவுப்புறம், சுறவுக் கோடு, களிற்று மருப்பு - ஆறாம் வேற்றுமைத் தொகைகள்
முள்ளிலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
பெருங்களிறு, நன்மான், நெடுந்தேர் - பண்புத்தொகைகள்
செலீஇய - சொல்லிசையளபெடை
யாரும் - முற்றும்மை
பசுங்கால் - பண்புத்தொகை
ஒழுகுநீர் - வினைத்தொகை
குருகும் - இழிவு சிறப்பும்மை
கருங்காக்கை, பச்சூன், பைந்நிணம், வெஞ்சினம் - பண்புத்தொகைகள்
பொலம்புனை - மூன்றாம் வேற்றுமைத் தொகை
புனைகலம் - வினைத்தொகை
வேற்காளை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
காளை - உவமையாகுபெயர்


**Download more study materials visit www.tnpsctamil.in 40 of 48.**

திருமுருகன் B.E

செய்யாமல் - எதிர்மறை வினையெச்சம்
செய்த - இறந்தகால பெயரெச்சம்
வையகமும் வானகமும் - எண்ணும்மை
அரிது, பெரிது, வரைத்து - ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று
உதவி வரைத்து - குறிப்பு பெயர்
சால்பி வரைத்து - அஃறிணை ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று
மறவற்க, துறவற்க - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று
எழுபிறப்பும் - முற்றும்மை
துடைத்தவர், கொன்றார் - வினையாலணையும் பெயர்கள்
நன்றி மறப்பது - இரண்டாம் வேற்றுமைத் தொகை
மறப்பது - தொழிற்பெயர்
உள்ள - வினையெச்சம்
கொன்ற - பெயரெச்சம்
அகழ்வார், இகழ்வார், ஒறுத்தார். பொறுத்தார் - வினையாலணையும் பெயர்கள்
பொறுத்தல், மறத்தல், பொறை - தொழிற்பெயர்கள்
போற்றி, பொதிந்து, நொந்து - வினையெச்சம்
தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை
செய்தாரை, துறந்தார், நோற்கிற்பவர் - வினையாலணையும் பெயர்கள்
இன்னாச் சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
உண்ணாது - வினையெச்சம்
அற்றம் - தொழிற்பெயர்
அழிக்கலாகா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
ஓரீஇ, தழீஇ - சொல்லிசை அளபெடை
எவ்வதுறைவது, உய்ப்பது - வினையாலணையும் பெயர்கள்
யார் யார் - அடுக்குத்தொடர்
எண்பொருள், நுண்பொருள் - பண்புத்தொகைகள்
மலர்தல், கூம்பல், அவ்வதுறைவது - தொழிற்பெயர்கள்
மலர்தலும், கூம்பலும் - எண்ணும்மை
அறிகல்லாதவர், அஞ்சுவது - வினையாலணையும் பெயர்கள்
அஞ்சாமை - எதிர்மறை தொழிற்பெயர்
அறிவார் தொழில் - ஆறாம் வேற்றுமைத்தொகை
அதிர - வினையெச்சம்
உடையார், இலர் - குறிப்பு வினைமுற்றுகள்
வினைத்திட்பம் - நான்காம் வேற்று உருபும் பயனும் உடன் தொக்க தொகை
மனத்திட்பம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
ஆய்ந்தவர் - வினையாலணையும் பெயர்
ஓரால், ஒல்காமை, சொல்லுதல் - தொழிற்பெயர்கள்
கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
எற்றா - ஈறுகெட்ட எதிமறை பெயரெச்சம்
எய்தி, கண்டு, கலங்காது, துலங்காது, கடிந்து - வினையெச்சக்கங்கள்
மாண்டார், எண்ணிய, வேண்டாரை - வினையாலணையும் பெயர்
எய்துப - பலர்பால் வினைமுற்று
எள்ளாமை, தூக்கம் - தொழிற்பெயர்கள்
எளிய, உடைத்து - குறிப்பு வினைமுற்று
பெருந்தேர் - பண்புத்தொகை
செய்க - வியங்கோள் வினைமுற்று


Download more study materials visit www.tnpsctamil.in 41 of 48.
கு முருகன் B.E

உலகு - இடவாகுபெயர்
ஈர்வளை - வினைத்தொகை
கையேந்தி - ஏழாம் வேற்றுமைத் தொகை
காற்சிலம்பு - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
நல்லுரை - பண்புத்தொகை
எள்ளல் - அல்லீற்று வியங்கோள் வினைமுற்று
நெடுந்தகை, தண்குடை, செங்கோல் - பண்புத்தொகைகள்
பொற்சிலம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
உண்கண் - வினைத்தொகை
மாமதுரை, மாஞாலம், மாமலை, மல்லல் மதுரை - உரிச்சொற்றொடர்கள்
ஒளிப்ப - செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சம்
ஈன்ற குழவி - இறந்தகால பெயரெச்சம்
தாங்குறூஉம், வளர்க்குறூஉம் - இன்னிசையளபெடைகள்
வைவாள் - உரிச்சொற்றொடர்
நிறைமதி - வினைத்தொகை
வளைக்கை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
மொய்கழல் - வினைத்தொகை
தொழுகிலன் - எதிர்மறைவினைமுற்று
கழல் - தானியாகு பெயர்
திண்டிறல் நோக்கினான் - பண்புத்தொகை புறத்து பிறந்த அன்மொழித்தொகை
வண்டுற ஓதியும் வலியள் - வினைத்தொகை புறத்து பிறந்த அன்மொழித்தொகை
வலியள் - குறிப்பு வினைமுற்று
தெண்டிரை, பெருந்தவம், பெருந்தடந்தோள், ஆருயிர் - பண்புத்தொகை
வீங்குநீர், அலைகடல், களிநடனம், விரிநகர் - வினைத்தொகை
தடந்தோள், மாமணி - உரிச்சொற்றொடர்
இற்பிறப்பு - ஏழாம் வேற்றுமைத் தொகை
உம்பி - உன் தம்பி என்பதன் மரூஉ
பொலங்குழை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
கண்ணின் நீர்க்கடல் - உருவகம்
கோறல் - தொழிற்பெயர்
சொல்லுமின் - ஏவல் வினைமுற்று
பொன்னடி, மலரடி - உவமைத்தொகை
வண்ண மோதிரம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
போர் அடையாளம் - உம்மைத்தொகை
நிற்பிரிந்த - இரண்டாம் வேற்றுமைத்ய் தொகை
கைத்தலம் - இருபெயரொட்டு பண்புத்தொகை
கதுவிடா - ஈறுகெட்ட எதிஎமறைப் பெயரெச்சம்
அகில்முகில், மதம்பொழி கரி, பொழிமறை - வினைத்தொகை
கருமுகில், வெஞ்சுடர், பேரிடி - பண்புத்தொகைகள்
கூடினர், கேட்டனர், அஞ்சினர் - வினையாலணையும் பெயர்
நான்அவன் - உம்மைத்தொகை
அறைந்தறைந்து - அடுக்குத்தொடர்
கதத்த, அரிய ஆண்மை - குறிப்பு பெயரெச்சம்
தொடந்தனன் நகைப்பான் - முற்றெச்சம்
அளிக்குவென் - தன்மை ஒருமை வினைமுற்று
கேட்ட வாசகம், இரிந்த பாலன் - பெயரெச்சம்


**Download more study materials visit www.tnpsctamil.in 42 of 48.**

கைவயம், மெய்வயம் - ஆறாம் வேற்றுமைத் தொகைகள்
வைவேள், நாமவேல் - உரிச்சொற்றொடர்
என்மகள் - நான்காம் வேற்றுமைத்தொகை
காத்தார், தருவார் - வினையாலணையும் பெயர்கள்
விலகாத - எதிர்மறை பெயரெச்சம்
ஈன்ற தந்தை, இழந்த பரிசு, முழங்கிய செய்தி - பெயரெச்சம்
கொழுத்த புகழ் - பெயரெச்சம்
வாயிலும் மாளிகையும், மாடமும் ஆடரங்கமும் - எண்ணும்மை
எம்மருங்கும் - முற்றும்மை
செய்குன்று, ஆடரங்கு - வினைத்தொகைகள்
மயங்கி, பிணங்கி, வணங்கி, உயங்கி - வினையெச்சங்கள்
சோணாடு - சோழ நாடு என்பதன் மரூஉ
மதியெறிந்து, வானெறிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்
பேரிஞ்சி, முது முரசம் - பண்புத்தொகைகள்
போர் முரசம் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
உயரண்டாம் - வினைத்தொகை
சிற்றன்னை - பண்புத்தொகை
தாழ்பிறப்பு - வினைத்தொகை
மாழ்கழல் - ஆறாம் வேற்றுமைத்தொகை
கழல் - தானியாகுபெயர்
மாலைமதி - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
மதிக்குஞ்சி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
ஈசனும் போதனும் - எண்ணும்மை
அந்தி காலை - உம்மைத்தொகை
கைம்மலை, மதிவிளக்கு - உருவகம்
உறை வேங்கடம் - வினைத்தொகை
அவியா மதிவிளக்கு - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
சேவடி, நற்றாய், பெருந்தெய்வம் - பண்புத்தொகை
கவி புனைந்தோம் - இரண்டாம் வேற்றுமைத்தொகை
இருக்கு ஆரணம் - இருபெயரொட்டு பண்புத்தொகை
வேங்கட மாயவன் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
கயிலாய வெற்பு - இருபெயரொட்டு பண்புத்தொகை
அசலம் - காரணப்பெயர்
முச்சங்கம் - பண்புத்தொகை
துஞ்சுமுகில், இரை தேர் குயில், வளர்கூடல் - வினைத்தொகைகள்
மதப்பிஞ்சு - ஆறாம் வேற்றுமைத் தொகை
மாமதி - உரிச்சொற்றொடர்
இரைதேர் - இரண்டாம் வேற்றுமைத்தொகை
வெண்தயிர், செந்நெல் - பண்புத்தொகை
நாழிகை வாரம் - உம்மைத்தொகை
தாபதர் உள்ளம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
சுழி வெள்ளம் - வினைத்தொகை
படர்முகில், சுடரொளி - வினைத்தொகை
செழும்பொன், பெரும்பூதம், கருஞ்சிகரம் - பண்புத்தொகைகள்
தங்கத்தீவு, தங்கத்தோணி, பொற்கரை, தங்கத்திமிலங்கம் - உருவகங்கள்
அன்புநெறி - இருபெயரொட்டு பண்புத்தொகை

திரு முருகன் B.E


**Download more study materials visit www.tnpsctamil.in 43 of 48.**

இனிதுஇனிது, சுமைசுமையாய், துறை துறையாய் - அடுக்குத்தொடர்
உயர் எண்ணம் - வினைத்தொகை
சுவடிச்சாலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
செந்தமிழ் - பண்புத்தொகை
தருதல், வைத்தல் - தொழிற்பெயர்கள்
முட்புதர் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
உயர்மரம், முதிர்மரம் - வினைத்தொகை
வெய்யோன் திங்கள் - உம்மைத்தொகை
கள்ளிப்புதர் - ஆறாம் வேற்றுமைத்தொகை
சட்டதிட்டம் - உம்மைத்தொகை
நீதிநூல் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
நீருற்று - ஆறாம் வேற்றுமைத்தொகை
விக்கி விக்கி - அடுக்குத்தொடர்
தீராத - எதிர்மறை பெயரெச்சம்
சிந்தித்தேன் - தன்மை ஒருமை வினைமுற்று
கன்றுகுரல் - ஆறாம் வேற்றுமைத்தொகை
தலைகுனிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
பாடுகிறாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று
வெறுங்கை, கருங்கல் - பண்புத்தொகை
விரல்கள் பத்தும், தோள்களிரண்டும் - முற்றும்மைகள்
மலர்ச்சோலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
தொடுவானம் - வினைத்தொகை
கங்கையும் சிந்துவும் - எண்ணும்மை
தெற்கு வடக்காய் - முரண்தொடை
மாவ - உரிச்சொற்றொடர்
விண்ணிலும் மண்ணிலும் - எண்ணும்மை
புல்நுனி - ஆறாம் வேற்றுமைத்தொகை
கண்ணீர் வெள்ளம், பசிக்கயிறு, பம்பரம், மெல்லியக் காம்பு - உருவகங்கள்
சிறுவிரல், தீக்குச்சிகள் - உருவகங்கள்
கண்ணுதல் - இலக்கண போலி
பழ ஆவணம் - பண்புத்தொகை
சொற்பதம் - ஒருபொருட்பன்மொழி
ஆனாத - எதிர்மறை பெயரெச்சம்
தற்சூழ - இரண்டாம் வேற்றுமைத்தொகை
தீநெறி, கடும்பகை - பண்புத்தொகை
என்கோ - தன்மை ஒருமை வினைமுற்று
உயர்ந்தோய், செறுத்தோய் - முன்னிலை வினைமுற்றுகள்
புடைபுடை - அடுக்குத்தொடர்
பொங்கு தாமரை - வினைத்தொகை
முக்குடை - பண்புத்தொகை
கன்னிபாலன் - நான்காம் வேற்றுமைத்தொகை
மெய்ப்பொருள், சுவர்க்கபதி - இருபெயரொட்டு பண்புத்தொகைகள்

திருமுருகன் B.E


Download more study materials visit www.tnpsctamil.in 44 of 48.

452) ஐந்திணை முதற்பொருள் :

| திணை | நிலம் | சிறுபொழுது | பெரும்பொழுது |
| --- | --- | --- | --- |
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | யாமம் | கூதிர், முன்பனி |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மாலை | கார் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | எற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் |
| பாலை | வெப்பம் மிகுந்த சுரமும் சுரம் சார்ந்த இடமும் | நண்பகல் | வேனில், பின்பனி |

453) சிறுபொழுது :

மாலை - கதிரவன் மறைந்த பிறகு இரவுப்பொழுதின் முற்பகுதி
யாமம் - நள்ளிரவு; இரவுப்பொழுதின் பிற்பகுதி
வைகறை - கதிரவன் தோன்றுவதற்கு முன் இரவுப்பொழுதின் இறுதிப்பகுதி
காலை - கதிரவன் தோன்றியதற்குப் பின் பகற்பொழுதின் முற்பகுதி; விடியற்காலம்
நண்பகல் - பகற்பொழுதின் நடுப்பகுதி
எற்பாடு - பகற்பொழுதின் இறுதிப்பகுதி, கதிரவன் மறைகின்ற காலம்

454) பெரும்பொழுது :

கார் -- ஆவணி, புரட்டாசி
கூதிர் -- ஐப்பசி, கார்த்திகை
முன்பனி -- மார்கழி, தை
பின்பனி -- மாசி, பங்குனி
இளவேனில் -- சித்திரை, வைகாசி
முதுவேனில் -- ஆனி, ஆடி


Download more study materials visit www.tnpsctamil.in 

455) **ஐந்திணைக் கருப்பொருள் :**

| | குறிஞ்சித் திணை | முல்லைத் திணை | மருதத் திணை | நெய்தல் திணை | பாலைத் திணை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | துர்கை |
| மக்கள் | சிலம்பன், வெற்பன், பொருப்பன், கொடிச்சி, குறத்தி | குறும்பொறை நாடன், தோன்றல், கிழத்தி, மனைவி | ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி | துறைவன், சேர்ப்பன் | மீளி, விடலை, காளை, எயிற்றி |
| | குறவர், குறத்தியர், கானவர் | ஆயர், ஆய்ச்சியர், இடையர் | கடையர், கடைசியர், உழவர், உழத்தியர், இடைச்சியர் | பரதவர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர் | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| பறவை | கிளி, மயில் | கானக்கோழி | நாரை, நீர்க்கோழி, அன்னம், குருகு | நீக்காக்கை | கழுகு, பருந்து, புறா |
| விலங்கு | புலி, கரடி, பன்றி | முயல், மான் | எருமை, நீர்நாய் | சுறா | வலிமை இழந்த புலி, செந்நாய் |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | சுனை நீர், அருவி நீர் | கான்யாறு | மனைக் கிணறு, பொய்கை, யாறு | உவர்நீர்க்கேணி, உவர்க்கழி | நீர் வற்றின சுனை, நீர் வற்றிய கிணறு |
| பூ | காந்தள், குறிஞ்சி, வேங்கை | முல்லை, குல்லை, பிடவம், தோன்றி | தாமரை, கழுநீர் குவளை | தாழை, நெய்தல், புன்னை | மரா, குரா, பாதிரி |



Download more study materials visit www.tnpsctamil.in 46 of 48.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மரம் | அகில்,<br>சந்தனம்,<br>வேங்கை | கொன்றை,<br>குருந்து,<br>காயா | மருதம்,<br>வஞ்சி,<br>காஞ்சி | புன்னை,<br>தாழை | இருப்பை,<br>ஓமை,<br>உழிஞை,<br>பாலை |
| உணவு | திணை,<br>மலைநெல்,<br>மூங்கிலரிசி | வரகு, சாமை,<br>முதிரை | செந்நெல்,<br>வெண்ணெ<br>லரிசி | மீனும்,<br>உப்பும்<br>விற்றலால்<br>பெறும்<br>பொருள் | வழிப்பறி<br>செய்த<br>பொருள்,<br>கொள்ளையடித்<br>த<br>பொருள் |
| பறை | வெறியாட்டுப்<br>பறை,<br>தொண்டகப்ப<br>றை | ஏறுகோட்<br>பறை | மனமுழா,<br>நெல்லரிகி<br>ணை | மீன்கோட்ப<br>றை | போர்ப்பறை,<br>ஊரெறிபறை |
| பண் | குறிஞ்சி பண் | முல்லைப்பண்<br>(சாதாரி) | மருதப்பண் | நெய்தல்பண்<br>(செவ்வழி) | பாலைப்பண்<br>(பஞ்சுரம்) |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| தொழில் | தேனெடுத்தல்,<br>கிழங்ககழ்தல்,<br><br>வெறியாடல்,<br>தினைகாத்தல் | வரகு<br>விதைத்தல்,<br>களை<br>பறித்தல்,<br>ஆநிரை<br>மேய்த்தல்,<br>குழலூதல்,<br>காளை<br>தழுவல் | நெல்லரிதல்,<br><br>களை<br>பறித்தல்,<br>கடா<br>விடுதல் | மீன் பிடித்தல்,<br>உப்பு விற்றல் | நிரை கவர்தல்,<br>சூறையாடல்,<br>வழிப்பறி<br>செய்தல் |

456) **ஐந்திணை உரிப்பொருள்**

குறிஞ்சித் திணை -- புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
முல்லைத் திணை -- இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
மருதத் திணை -- ஊடலும் ஊடல் நிமித்தமும்
நெய்தல் திணை -- இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
பாலைத் திணை -- பிரிதலும் பிரிதல் நிமித்தமும்


Download more study materials visit www.tnpsctamil.in 47 of 48.

457) குறுந்தொகை என்ற நூலை தொகுத்தவர் யார்? = பூரிக்கோ

458) பெரும்பொழுது என்பது யாது? = ஒரு ஆண்டின் 6 கூறுகள்

459) சிறுபொழுது என்பது யாது? = ஒரு நாளின் 6 கூறுகள்

460) 5 திணைகளிலும் இடம்பெறாத சிறுபொழுது எது? = காலை

461) ஆறு பெரும்பொழுதுகள் இடம்பெறும் இரு திணைகள் யாது? = மருதம், நெய்தல்

திரு.பழனி முருகன் B.E



Download more study materials visit www.tnpsctamil.in 48 of 48.